# நாடக தீபம்

நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்கள்

நினைவு வெளியீடு



" சாரங்கா "

*காங்கேசன் துறை*

**07-08-1989**



# நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்கள்

| | |
|---|---|
| *மண்ணரங்கில் ;* | *விண்ணரங்கில் ;* |
| **11 – 02 – 1924** | **08 – 07 – 1989** |

*உருகி உடல்கருகி உள்ளீரல் பற்றி*
*எரிய எமைநீத்த தேனே - அரியபுகழ்*
*மைந்தா வடிவழகா வான்புகழும் நற்கலைஞ*
*எந்தாய் எமக்கார் இனி*

ஆசிரியர் க. முருகேசு

உ

சிவமயம்

## பஞ்சபுராணம்

### விநாயகர் துதி

சக்திக் கணபதியே சாதுக்களைக் காக்கும்
சுத்தச் சிவஞான சோதியே — பக்தியுடன்
என்னையுனக் கீந்தேன் இறைவா குருபரனே
உன்னை எனக்கீவாய் உவந்து.

### தேவாரம்

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானையுமை யொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

தந்தையார் தாயார் உடன் பிறந்தார் தாரமார்
புத்திரரார் தாந்தா மாரே
வந்தவாறு எங்ஙனே போமா(று) ஏதோமாயமாம்
இதற்கேதும் மகிழவேண்டாம்
சிந்தையீர் உமக்கு ஒன்றுசொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே.

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

பேராயிரம் பரவி வானோரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா வடியார்க்கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான்றன்னைத்
திரிபுரங்கடீயெழத் திண்சிலைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்குவே ளூரானைப்
போற்றுதேயாற்ற நாள் போக்கினேனே.

குறைவிலா நிறைவே குணக்குன்றே
கூத்தனே குழைக்கா துடையானே
உறவிலேனுனை யன்றி மற்றடியேன்
ஒருபிழை பொறுத்தாலிழிவுண்டே
சிறைவண்டார் பொழில் சூழ்திருவாரூர்ச்
செம்பொனே திருவாவடு துறையுள்
அறவனே யெனையஞ்சலென்றருளாய்
ஆரெனக்குறவ மரர்களேறே.

## திருவாசகம்

ஒன்றினேடொன்று மோரைந்தினேடைந்து
முயிர்ப்பதுமாகாதே
உன்னடியாரடி யாரடியோமென
வுய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயெனவந்த
கணக்கது வாகாதே
காரண மாகுமனுதி குணங்கள்
கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்கம்
நடந்தன வாகாதே
நாமுமெலாமடி யாருடனேசெல
நண்ணுது மாகாதே
என்று மெனன்பு நிறைந்த பராவமு
தெய்துவதாகாதே.
ஏறுடையானெனை யாளுடை நாயகன்
என்னுள் புகுந்திடிலே.



## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக்கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டுமனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள்
விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளளவிலதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம் (விநாயகர்)

மண்ணுலகினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## திருப்புகழ்

இசைந்த ஏறுங்கரியுரி போர்வையும் — எழில் நீறும்
இலங்குநூலும் புலியதளுடையு — மழுமானும்
அசைந்த தோடுமஞ் சிரமணி மாலையு — முடிமீதே
அணிந்த ஈசன் புரிவுடன் மேவிய — குருநாத
உசந்த சூரன் கிளையுடன் வேரற — முனைவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் — நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் — வரவேணும்
அமைந்த மேலும் புயமிசை மேவிய — பெருமாளே

## பிறவிக்கலைஞன்

ஈழத்து அண்ணாவி மரபு நாடக வரலாற்றிலே கடந்த 25 ஆண்டாகத் தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாது விளங்குகின்ற நடிகமணி வி. வி. வைரமுத்துவுக்கு வெள்ளி விழா எடுக்கும் இவ்வேளையில் இவரின் சாதனைகள் பற்றிச் சிந்திப்பது பொருத்தமானது.

இவருக்குப் புகழ் தேடித்தந்தவை அரிச்சந்திர நாடகமும் பக்த நந்தனார் நாடகமும். அரிச்சந்திரனாகவும் நந்தனாராகவும் இவரைப்போல வேறொருவரும் கடந்த கால் நூற்றாண்டாகச் சிறப்பாக நடிக்கவில்லை என்பது யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

வேறெந்த நாடகத்திற்குமில்லாத பெருமை இவர் நடித்த அரிச்சந்திர நாடகத்திற்கு உண்டு. வேறெந்த நாடகமும் 2000 தடவைகளுக்கு மேல் மேடையிடப்படவில்லை. பலர் ஒரு நாடகத்தை ஒரு முறை அல்லது இருமுறை பார்ப்பார்கள். ஆனால் அரிச்சந்திர நாடகத்தை நூற்றுக்கு மேற்பட்ட தடவை பலர் பார்த்திருக்கின்றார்கள்; அவர்கள் இன்னும் பல தடவை பணம் கொடுத்துப் பார்ப்பார்கள். சிங்கள மக்களும் பல தடவை பார்த்து உள்ளத்தைப் பறிகொடுத்த நாடகம் இது. பேராதனையிலும் கண்டியிலும் கொழும்பில் பலர்-தமிழ் தெரியாத பலர் - இறுதிவரை சோர்வு ஏற்படாமற் பல தடவை பார்த்த நாடகம் இது.

1953ம் ஆண்டு இலண்டன் வானொலி நிலையத்திலிருந்து வந்த வெளி என்ற ஆங்கிலேயர் மயான காண்டத்தைத் திறந்த வெளியில் ஒலிப்பதிவு செய்த போது, சந்திரமதி - அரிச்சந்திரன் புலம்பல் நடைபெறும் கட்டத்தில் தம்மை அறியாமல் அழத் தொடங்கிவிட்டார். (வழக்கமாக மனம் உருகாத கல் நெஞ்சு உடையவர்கள் இக்கட்டத்தில் கண்ணீர் விடுவதை ஒவ்வொரு மேடையேற்றத்தின் போதும் காணலாம்) பிற நாடுகளில்-இலண்டனில், வாஷிங்டனில், வேல்ஸில், யூகோசிலாவியாவில்-மயானகாண்டம் ஒலிப்பதிவின் மூலம் நடமாடுகின்றது

ஈழத்தின் பல பாகங்களில் மேடையிடப்பட்ட பெருமை வேறு எந்நாடகத்திற்குமில்லை. கொழும்பு, கண்டி, பேராதனை, கம்பளை, ஹற்றன், மாத்தளை, மட்டக்களப்பு, கல்முனை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற பிரதேசங்களிற்



பல தடவை இந்நாடகம் மேடை யேற்றப்பட்டுள்ளது. இலங்கைக் கலைக் கழகம், இலங்கைத் தேசிய நாடக நிறுவனம், பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம், சைவ மகாசபைகள், பிரதேசக் கலா மன்றங்கள், நாடக மன்றங்கள் எனப் பல ஸ்தாபனங்கள் வைரமுத்துவைப் பலவகையிற் கௌரவித்திருக்கின்றன.

இன்று மேடையிடப்படும் பல நாடகங்கள் கிராமப்புறங்களில் மேடையேறுவது குறைவு. அவற்றைப் பெரும்பாலும் பார்ப்பவர்கள் நடுத்தர வகுப்பினரே. நடிப்பவர்களும் நடுத்தர வகுப்பினரே. எனவே இன்றைய நாடகங்களுக்கும் பொது மக்களுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்று கூறலாம். ஆனால், வைரமுத்துவின் நாடகங்களில் நடிப்பவர் சாதாரண தொழிலாளிகள். அவர்களுடைய நாடகங்கள் எல்லாக் கிராமப் புறங்களிலும் நகர்ப் புறங்களிலும் மேடையிடப்படுகின்றன. எனவே, வைரமுத்துவையும் அவரது குழுவினரையும் ஜனரஞ்சகக் கலைஞர்கள் எனலாம். மக்களுக்காக, மக்களின் நன்மைக்காக, மக்கள் நாடகம் நடிப்பவர்கள் வசந்தகான சபையினர். இதனாலேயே இவர்கள் நாடகங்களுக்கு எல்லோரதும் ஆதரவு கிடைக்கின்றது.

தற்கால நாடகங்கள் பலவற்றில் மேடை உத்திகளிற் புதுமையைக் காணுகின்றோம்; ஒளியமைப்பில் வளர்ச்சியைக் காணுகின்றோம்; கதைக் கருவிலும் வேறுபாட்டைக் காணுகின்றோம். ஆனால், இந்நாடகங்களில் நடிகருக்கும் சபையோருக்கும் இணைப்பு ஏற்படுவதாக இல்லை. வெளித் தோற்றத்தில் நன்றாக இருந்தபோதும், இவை சிறந்த நாடகக் கலைப் படைப்புக்களாக அமையவில்லை. ஆனால் வைரமுத்து அவர்கள் எந்தவித மேடை உத்திகளும் இன்றி, நடிப்பாலும் பாட்டாலும் பேச்சாலும் சபையோரின் உள்ளத்தைக் கவர்ந்து வெற்றிகரமாக நாடகத்தை மேடையேற்றுகின்றார். அவர் நாடகத்தில் நடிப்போர் யாவருமே சிறந்த நடிகர்கள். எல்லாப் பாத்திரங்களும் ஒருமைப் பாட்டுடன் இயங்குவதும் குறிப்பிடத்தக்கது.

வைரமுத்து பிறவி நடிகன். அவர் கலைஞர் பரம்பரையிலே தோன்றியவர். அவரின் பிள்ளைகளும் கலைஞர்கள். நாடகத்திலே அரிச்சந்திரனாக நடிக்கும் வைரமுத்து, தன் பெண்பிள்ளைகளையே லோகிதாசனாக நடிக்கவைத்தார். அவர்களையே சுடு காட்டிற் பிணமாகக் கிடக்கவைப்பார். சுடுகாட்டில் தனது சொந்தப் பிள்ளைகளைக் காவல் செய்யும் தண்டினால் உருட்டும் போது, ''நிறுத்து'' என்று சொல்லத்தான் தோன்றும். சிறந்த நடிகனாலேயே நாடகத்திற்குத் தன்னை அர்ப்பணம் செய்ய முடியும்.

அண்ணாவி மரபு நாடகத்திலே வைரமுத்துவைப் போல வேறொரு நடிகரும் இன்று இல்லை.

பேராசிரியர் கலாநிதி: க. வித்தியானந்தன்
நன்றி தினகரன் 1972-04-

## தமிழ் நாடகத்தின் மரணிக்காத குரல்

நடிகமணி வைரமுத்துவின் நடிப்பாற்றல் தமிழகத்துக்கும் தெரிந்திருக்குமேல் வைரமுத்துவின் மறைவு தமிழ் அரங்கின் பேரிழப்பாகவே எடுத்துரைக்கப்பட்டிருக்கும். தமிழகத்துக்குத் தெரியாமலே தமிழ்க் கலைக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பு இது.

வைரமுத்துவின் அரங்கு (Theatre) ஸ்பெஷல் நாடக மரபுவழிவந்த சங்கரதாஸ் சுவாமிகள் முதலியோரா ற்சனரஞ்சகப்படுத்தப்பட்ட இசை நாடக மரபு. அந்த இசை நாடக மரபின் அச்சாணியான அமிசம் இசையின் நாடகத்தன்மை, நாடகத்தின் இசையுள்ளடக்கம் ஆகும். இசையினைப் பாடும் முறையில் நடிப்புத் திறன், உணர்ச்சி வெளிப்பாட்டுத்திறன் பளிச்சிடவேண்டும். மற்றது, நாடகத்தின் உயிர் நாடியான கருத்து இசைக்கூடாகவே வெளிக்கொணரவேண்டும். பாடகரான நடிகரும், நடிப்பாற்றல் மிக்க பாடகரும் இவ்வரங்கின் இன்றியமையாத் தேவைகள்.

இந்த அரங்கில், தலைசிறந்த பாடகர்கள் இடம்பெற்றுள்ளனர். தலைசிறந்த நடிகர்கள் இடம்பெற்றுள்ளனர். இரண்டு திறனையும் சமமாகப் பெற்றிருந்தோர் மிகச்சிலரே. விஸ்வநாததாஸ், சங்கரதாஸ் சுவாமிகள், கிருஷ்ணாழ்வார் என அந்தப் பட்டியல் செல்லும். அந்தப்பட்டியலில் வைரமுத்து, ஏறத்தாழக் கடைசிப் பெயர் எனலாம்.

வைரமுத்து இப்பொழுது வரலாற்றுப் பொருளாகிவிட்டார். அவர் கீர்த்தி வையகம் அளந்துவிட்டது.

அந்தக் கலைஞனுக்குள்ளிருந்த மனிதன் மிக அற்புதமானவன். நுண்ணிய உணர்வினன், பொறாமையற்றவன், மற்றவர்களின் திறமை வெளிப்பாட்டிலேதான் தன் பூரணத்துவத்தைக் கண்டவன். தமிழின் தலைசிறந்த நடிகர்களுள் ஒருவனின் மறைவோடு ஓர் அற்புதமான மனிதனையும் இழந்து நிற்கின்றோம்; இந்த மரணங்கள் மனிதனைப் பலவீனப்படுத்துகின்றன.



மயானங் காத்த வேடம் பூண்டு அமரத்துவம் அடைந்தவன் மயானத்துக்கும் அப்பால் சென்றுவிட்டான். ஆனால் அவனது,

''யாரடி கள்ளி நீதான் .....'' என்ற குரல் ஒலி காதுகளுக்குள் நிறைந்துகிடக்கின்றது.

அந்த ஒலியின் இனிமையில் வைரமுத்து வாழுவார்.

தமிழ் நாடகம் வாழும்

'நடராஜ கோட்டம்',
வல்வெட்டித்துறை
27-07-89

கார்த்திகேசு சிவத்தம்பி
பேராசிரியர்
யாழ் பல்கலைக்கழகம்

மிகையாக நடிக்கும் முறையை நீங்கள் தவிர்க்க வேண்டுமென்று விரும்புகிறேன். இதற்காக உணர்ச்சியே இல்லாமல் உயிரற்று இருந்து விடாதீர்கள்..... வசனத்துக்குத் தகுந்த, நடிப்பையும் நடிப்புக்குத் தகுந்த வசனத்தையும், கையாளுங்கள்... முற்காலத்திலும், இக்காலத்திலும், இயற்கையைக் கண்ணாடிபோல் எதிரொலிப்பதுதான், எழில் மிக்க நடிப்பின் குறிக்கோளாகும்.

— சேக்ஸ்பியர்

## ஈழத் தமிழரின் தேசியக் கலைஞன்

1986 ஆம் ஆண்டு அகில இலங்கை நாவலர் சபை நடிகமணி வி. வி. வைரமுத்துவுக்கு 'நடிகமாமணி' என்னும் விருதினை வழங்கிக் கௌரவித்தபோது, அவரைப்பற்றிப் பின்வருமாறு நான் அறிமுகஞ் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது.

நடிகமணி வி. வி. வைரமுத்துவை அறியாதவர் ஈழத்தில் வெகு சிலரே. 1924 ஆம் ஆண்டு காங்கேசன்துறையிலே பிறந்த திரு. வைரமுத்து தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவனாகத் தமது பதின்மூன்றாவது வயதிலே 'அப்பூதி அடிகள்' நாயனாராக மேடையேறினார். பக்த நந்தனார், அரிச்சந்திர மயானகாண்டம், சாரங்கதாரா, வள்ளிதிருமணம், அல்லி அர்ச்சுனா, சத்தியவான், சாவித்திரி கோவலன், ஏழுபிள்ளை நல்லதங்காள், ஞானசௌந்தரி, பூதத்தம்பி ஆகிய நாடகங்களிலே பிரதான பாத்திரங்கள் ஏற்று நடித்து வந்துள்ளார். இவருடைய மயானகாண்டம் ஆயிரத்துக்கு மேற்பட்ட தடவைகள் மேடையேறிது. திரு. வைரமுத்துவின் நாட்டுக்கூத்துப் பணியையும் திறமையையும் பாராட்டி 1953 இல் நெல்லியடி நாவலர் மடம் கலையரங்கிலே, கலையரசு சொர்ணலிங்கத்தால் 'நடிகமணி' என்னும் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. இலங்கைக் கலைக் கழகத்தால் பல தடவை கௌரவித்துப் பாராட்டப்பட்டவர். ஈழத்து மரபுவழி நாடக உலகிலே தனக்கொரு இணையற்ற இடத்தினைத் தேடிக்கொண்டு தொடர்ந்தும் இத்துறையிலே பணியாற்றி வரும் திரு. வைரமுத்துவின் சேவைகளைப் பாராட்டி நாவலர் சபை "நடிகமாமணி" என்னும் பட்டத்தினை இவருக்கு வழங்குகின்றது.

இவ்வாறு அன்று அறிமுகஞ் செய்யப்பட்ட கலைஞர் இன்று வரலாறாகி விட்டார்.

நான் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே மாணவனாயிருந்த காலத்திலே, அரிச்சந்திரனாக மேடையிலே தோற்றிய நடிகமணி வைரமுத்துவை முதல்தடவை கண்டேன். பின்னர் பேராசிரியர் வித்தியானந்தன் வீட்டுக்கு அவர் வந்து செல்லும்போது சந்தித்துப் பேசும் வாய்ப்பு



ஏற்பட்டது. பேராசிரியர் தயாரித்து மேடையேற்றிய 'கர்ணன் போர்' நாட்டுக்கூத்திலே கிருஷ்ணராக நான் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே அக்கூத்து மேடையேறியபோது நடிகமணியும் அங்கு வந்திருந்தார். கூத்து முடிவிலே கர்ணனாக நடித்த மௌனகுருவினையும், கண்ணனாக நடித்த என்னையும் நடிகமணி அவர்கள் பாராட்டியதை இன்று நினைத்துப் பார்க்கிறேன்.

1984 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கைலாசபதி கலையரங்கிலே பெருந்தொகையான மாணவர்கள், ஆசிரியர்கள் முன்னிலையிலே, தான் நடித்த நாடகங்கள் பலவற்றிலே பாடிய பாடல்களை நடிகமணி அருமையாகப் பாடிக் காட்டினார். அன்று அந்நிகழ்ச்சியினை அறிமுகஞ் செய்து இணைப்புரை கூறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கோவலன் நாடகத்தில் "அடைக்கலமே" என்று தொடங்கும் பாடல் கண்ணகியை இடைச்சியம்மையிடம் அடைக்கலமாகக் கோவலன் கொடுக்கும் சந்தர்ப்பம். இதனை நாட்டாரிசையிலே

"கண்ணகி உத்தன் அடைக்கல மம்மா
காரிகை யுத்தன் அடைக்கல மம்மா"

என்று நான் பாடிவிட்டு, "இதே சந்தர்ப்பத்தை விளக்கும் பாடலை சாமா இராகத்தில் நடிகமணி கோவலன் நாடகத்திலே பாடுவார்" என்று கூறியவுடன் தன்னுடைய கணீர் என்ற குரலிலே 'அடைக்கலமே' என்று தொடங்கிப் பாடினார். நேரமே போனது தெரியாமல் ஒரு மணித்தியாலம் முப்பது நிமிடங்கள் எல்லோரையும் பரவசப்படுத்திய கலைஞரை இன்று நினைந்துப் பார்க்கிறேன்.

தனிப்பட்ட நினைவுகளை விடுத்து நடிகமணியைத் தமிழர்களின் தேசியக் கலைஞன் என்று நோக்குமிடத்து, அவருடைய தனித்துவமும், அவர் வரலாறாகிவிட்ட தன்மையும் தெளிவாகப் புலப்படும் நாட்டுக்கூத்துக்களும், தென்னகத்திலிருந்து வந்த கொட்டகை நாடகங்களும் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையிலே, இவற்றினின்று வேறுபட்டனவாக் காணிக்கக்கூடிய வகையிலும், அண்ணாவி மரபு நாடகங்கள் எனத் தனிவகையாகப் பிரித்து இனங்காணக்கூடிய வகையிலும் நடிகமணி வைரமுத்துவினுடைய நாடகங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் மேடையேறிக்கொண்டிருந்தன. பாடல்களைப் பொருள் விளங்கக்கூடிய வகையிலும், பாவங்கள் எளிதிலே புலப்படத்தக்க வகையிலும், இராகங்களின் தன்மைகள் குறைவுறு வகையிலும் பாடுகின் பான்மை வைரமுத்துவினுடைய நாடகங்களின் தனித்துவமாகும். இவ்வாறான நாடகங்களிலே காணப்படாத நடிப்புப் பண்பு - பாத்திரங்களின் குணங்களைப் புலப்படுத்துகின்ற தன்மை

வைரமுத்துவின் நாடகங்களின் இன்னொரு தன்மையாகும். ''அப்பனே சத்திய கீர்த்தி'' என்று அரிச்சந்திர நாடகத்திலே வைரமுத்து பாடத் தொடங்கிவிட்டு, ''அரிச்சந்திரன் நானே'' என்று அடுத்த தொடரைப் பாடுவதற்கிடையில் நடிகமணியினுடைய நடிப்பினைப் பார்ப்பவர்கள் வைரமுத்து நடிகமணியே என்று ஏகோபித்த தொனியிலே கூறுவர். இப்படி ஒன்று இரண்டல்ல. நாடக முழுவதுமே இப்படியான நடிப்புத்தான்.

ஈழத்து இசைநாடக மரபிலே 'வைரமுத்துப் பாணி' என்று ஒன்று உண்டு என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வர். இனி எவராவது பக்த நந்தனார், அரிச்சந்திர மயான காண்டம் போன்ற நாடகங்களை மேடையேற்றினால், தவிர்க்கமுடியாதபடி அவர்கள் இந்த 'வைரமுத்துப் பாணி' யைப் பின்பற்றாவிட்டால் அந்நாடகங்கள் நிச்சயமாக மக்கள் மனங்களைத் தொட்டுவிடா. ஒரு குறிப்பிட்ட பாணியிலே அமைந்த ஓவியமோ சிற்பமோ ஏனையவற்றிலிருந்து தனித்துவமுடையதாயமையும் அதனைத் திரும்பத் திரும்ப பல நூறு வருடங்கள் கூட மக்கள் பார்த்து மகிழ்வதுண்டு. ''யாரடி கள்ளி நீ'' என்று மயான அமைதியைக் கிழித்துக் கொண்டு வரும் வைரமுத்துவின் பாடல் இடம் பெறும் சந்தர்ப்பத்தை மாத்திரம் எத்தனை நூறு தடவைகள் மக்கள் பார்த்துப் பரவசமும் வியப்பும் அடைந்துள்ளனர்.

ஆடலுடன் கூடிய நாட்டுக்கூத்து, ஆடற்பண்பில்லாத காத்தவராயன் போன்ற நாட்டுக்கூத்து, கத்தோலிக்க சமயத்தவர்கள் மன்னாரிலே ஆடும் ஆடற் பண்புடைய கூத்து, யாழ்ப்பாணத்திலே மேடையிடும் ஆடற் பண்பில்லாத கூத்து; நவீன மேடை நாடகம் என்பனவற்றை இனங்கண்டு வளர்க்க வேண்டிய நாம், இசை நாடகத்திலே ''வைரமுத்துப் பாணி'' யை இனங்கண்டு வளர்க்க வேண்டிய கடமைப்பாடுடையோம். இது தான் அக்கலைஞனுக்கு நாம் செலுத்தக் கூடிய மிகச்சிறந்த அஞ்சலியாகும்.

பேராசிரியர், அ. சண்முகதாஸ்

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அறுவிளிந் தற்று.

— குறள்



## ஈழத்துத் தமிழ் நாடக மரபுகளும் நடிகமணி அவர்களும்

ஈழம் வாழ் தமிழ் மக்களிடையே சில நாடக வடிவங்கள் இன்றும் பயில் நிலையிலுள்ளன. இவற்றை மரபுவழி நாடகங்கள், நவீன நாடகங்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பறைமேளக்கூத்து, வசந்தன்கூத்து, மகிடிக்கூத்து, தென்மோடிக்கூத்து, வடமோடிக்கூத்து என்பன மரபுவழி நாடகங்களுள் கூத்து வகைக்குள் அடங்குவன. கூத்து என்பது கதை தழுவி வரும் ஆட்டமாகும். கூத்தில் பிரதான இடம் பெறுவது ஆட்டமே. இவை ஒருமரபின், பழமை வாய்ந்தன.

யாழ்ப்பாணம், மன்னார்ப்பகுதிகளில் கூத்துக்கள் மேடையிடப்படுகின்றன. காத்தான்கூத்து வடபாங்கு, தென்பாங்கு, தென்மோடி என இவை அழைக்கப்படுகின்றன. இவற்றில் ஆடல்கள் இடம் பெறுவதில்லை அசைவுகளும், பாடல்களுமே இடம் பெறுகின்றன. காத்தான்கூத்துத் தவிர மிகப்பெரும்பாலான கூத்துகள் கிறிஸ்தவ மதக் கதைகளை உள்ளடக்கமாகக் கொண்டவை. ஈழத்தில் நாடக வளர்ச்சியில் இசை இன்னொரு மரபினை.

இவற்றை அடுத்து எம்மத்தியில் எழுந்த நாடக மரபு இசை நாடக மரபாகும். கர்னாடக இசையே நாடகத்தின் அடிப்படை. பாடலே இதன் ஊடகம். இது கொட்டகையில் நிகழ்த்தப்பட்டதனால் கொட்டகைக்கூத்து என அழைக்கப்பட்டது. இசை நாடகம், ஸ்பெஷல் நாடகம் அண்ணாவி மரபு நாடகம் என இதற்கு பல பெயர்களுள்ளன. ஈழத்து நாடக வளர்ச்சியில் இது வேறொரு மரபைச் சார்ந்தது.

இதனை அடுத்து எமக்கு வந்த இன்னொரு மரபே வசனம் பேசி நடிக்கும் நாடக மரபாகும். ஆங்கிலேயர் வருகைக்கும், படித்த மத்திய தரவர்க்கத்திற்கும் இதற்கு மிடையே தொடர்புகளுண்டு. இதனுடன் நவீன நாடக மரபு எம்மிடம் உதயமாகின்றது.

அண்மைக்காலமாக எமதுமத்தியில் தோன்றி வளர்ந்து வரும் நாடக மரபினை மோடியுற்ற நாடக மரபு என்போம். பண்டைய காலத்துறைகளின் சாரத்தையும் நவீன நாடகத்தையு மிணைத்ததன் விளைவே இம் மோடியுற்ற நாடகம். இம்மரபினுல் இன்றைய இளைஞர் கவரப்பட்டுள்ளனர்.

இவ்வண்ணம் ஈழத்துத் தமிழர் மத்தியில் வழக்கிலுள்ள முக்கிய மான நால்வகை நாடகமரபில் ஒருமரபான இசை நாடக மரபின் பிரதிநிதிதான் மறைந்த நடிகமணி V. V. வைரமுத்து அவர்கள். பண்டைய காலத்திற்கும், இன்றைய நவீன நாடகத்திற்கு மிடையில் நிற்கும் இணைப்புச் சங்கிலி என்றும் இம் மரபைக் குறிப்பிடலாம். இவ்விசை நாடக மரபை வளர்த்தெடுத்த ஈழத்தவர் பலர். இவர் களுள் பேரும், புகழும் பெற்றவராக தமது மயானகாண்டத்தை 3000 தடவைகளுக்கு மேல் நடத்தியவராக நடிகமணி தனித்து ஒளி வீசுகிருர். நடிகமணியின் சிறப்புகள் யாவை?

முதலாவதாக இசை நாடகத்தை ஈழத்தின் தமிழ்-வாழ் பிரதேசங் களிலும், தமிழ்மொழியறியாத சிங்கள மக்கள் மத்தியிலும் கொண்டு சென்ருர் இதன் முலம் தமிழர் மத்தியிலும் ஒரு நாடகமரபு உண்டென் பதை அவர் குறிப்பாக தமிழர் அல்லாத பலருக்கு உணர்த்திஞர்.

இரண்டாவதாக இந்த நாடகத்தில் நடிப்பு அம்சத்தை அவர் புகுத்திஞர் வைரமுத்துவின் நடிப்புப் பாணிபற்றித் தனியாகக் கூறலாம். அது கூத்துமரபினின்றும், நவீன நாடக மரபினின்றும் மாறுபட்டது. இசை நாடகத்திற்குரியது. தனித்துவமானது. அவரது நாடகமேடைப் பாடல்களை சும்மா அவர் வாயால் பாடும்போதும் பாடல்களின் சொற் களுக்கும், கருத்துகளுக்கும், அவர் அழுத்தம் கொடுத்தும் பாடும் முறையிலேயே நடிப்பின் தன்மையினைக் காணலாம். அதனை நாம் வைரமுத்துபாணி, நடிப்பு முறை எனலாம். இந்த வகையில்தான் அவர் ஏனைய இசை நாடக நடிகர்களிடமிருந்து வேறுபடுகிருர்.

மூன்ருவதாக அரங்கு என்ற வகையில் இசை நாடகத்தினை நவீன நாடக நெறிமுறைகளுக்கு ஏற்ப அவர் மாற்றியமைத்திருக் கிருர்.

நான்காவதாக அவரது சிறப்பு அவர்தனக்குப்பின்னும் தன்பாணி யில் ஒரு நாடக பரம்பரையினை உருவாக்கியுள்ளார்.

இவற்றிஞலேதான் இசை நாடகம் என்றதும் வைரமுத்து என்ற ஞாபகம் உடனே எல்லாருக்கும் வருகிறது. நவீன தமிழ்க் கவிதை என் றதும் பாரதியார் ஞாபகத்திற்கு வருதல்போல.

இத்தனைக்கும் மேலால் நடிகமணி அடக்கமு - முமையும், பண் பும் அதே நேரம் மிகுந்த ஆளுமையுமுள்ள பெரும் கலைஞர், அவரு ரின் பண்புகளையும், அவர் கலைப் பணியையும் இளம் கலைஞர்கள் என்றும் நினைவிலிருத்த வேண்டும்.

கலாநிதி. சி. மௌனகுரு



## அரங்கக்கலை வல்லோன்

அரங்கம் என்பது கூட்டுக்கலப்புடைய கலை என்பர். அதுவே அதன் பலமாகவும் பலவீனமாகவும் அமைகிறது என்றும் கூறுவர். மொழி, நடிப்பு, நெறியாளுகை காட்சிவிதானிப்பு, ஒளி விதானிப்பு, ஒப்பனை, வேட உடுப்பு விதானிப்பு ஆகிய அரங்கக் கலைகளும்; இசை, நடனம், ஓவியம், சிற்பம், கட்டடக் கலை, பேச்சு போன்ற பிற கலை களும் அரங்கில் பயன்படுவதை நாம் காணலாம். இக்கலைகள் அனைத் திலும் குறிப்பிடக்கூடிய அளவு அறிவும், பயிற்சியும் ஆற்றலும் உள்ள ஒருவரே அரங்கக்கலை வல்லோனுக முடியும். ஏனையோர் அரங்கில் கலைஞராக மட்டுமே இருக்கலாம். இக்கலைகளில் பலவற்றை ஆண்டு அனுபவித்து, அவையோருக்கும் அவ்வனுபவத்தைப் பகிர்ந்து, திக்கு விஜயம் புரிந்த வி. வி. வைரமுத்து அவர்கள் அரங்க வாழ்வைப் பூரணப் பொலிவோடு வாழ்ந்து முடித்தார்.

அவர் அவ்வாறு அரங்கில் பூரணத்துவத்தோடு கூடிய ஒருவாழ்வை வாழ்வதற்கு, அவருக்கு வாய்க்கப்பெற்ற வாய்ப்புக்களையும் அவரிடம் வாய்க்கப்பெற்றிருந்த சிறப்புக்களையும் சிறிது கருத்திற்கொள்வது அவ சியம். இசை நாடகப் பாரம்பரியத்தைத் தாங்கிவந்த குடும்பத்தின் வாரிசாக வாய்த்தமை; ''சானு'', ''இலங்கையர்கோன்'', பேராசிரி யர் க. வித்தியானந்தன், கே. எம். வாசகர் போன்ற பெரியோரின் ஆதரவும் அன்பும் வாய்க்கப்பெற்றமை; அகன்றறியா நட்புறவோடு இணைந்திருந்த சகநடிகர் கூட்டம் வாய்த்தமை; இல்லாததொன்றில்லை என வந்த இல்லாள் அகத்திருக்க வாய்க்கப்பெற்றமை; கங்குல் பொழுதுமுதல் விடிகாலைவரை விழித்திருந்து பார்த்துநின்ற நாட்டா ரெனும் நன்மக்கள் வாய்த்தமை; யாவும் வைரமுத்து அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்கள். இசை வல்லமை, நடிப்பாற்றல், தன்னுேடு இணைந்த நடிகர்களுக்குத் தலைவனுய், சேவகனுய், தம்பியாய், தமை யனுய், உற்ற நண்பனுய், எல்லாமாய் நின்ற நிலைத்திறன், நானெனும் அகந்தை அகன்ற நிலை, அனைவரையும் கனம்பண்ணும் பெற்றி, அனைத் தையும் கற்கும் ஆர்வம், புதியவற்றை அறியும் அவா, கற்றவற்றைக் கற்பிக்கும் ஆவல், நேர்மை, சத்தியம், செய்தொழில் தெய்வம் என்ற விசுவாசம், இவை யாவும் அவரிடம் வாய்க்கப்பெற்றிருந்த பேறுகள். இவற்ருல் வைரமுத்து அவர்களுள் கலை பிறந்ததோடு மனிதம் அவ தரித்தது.

உள்ளத்தின் ஒளி, வாக்கில் ஒளியையும், செயலில் பிரகாசத்தையும் பளிச்சிடச் செய்தது. வாக்கும் செயலும் தொழிற்படும் இடமே அரங்கம். வைரமுத்து அவர்களின் அரங்கில் வாக்கு இசையாகவும், செயல் நடிப்பாகவும் தொழிற்பட்டன. அவ்வரங்கில் வார்த்தைகள் உரத்துப் பேசினவா? அல்லது அவ்வார்த்தைகளைச் சுமந்துவந்த இனிய இசை உரத்துப் பேசியதா? அல்லது இவ்விரண்டையும் விட மேடையில் நிகழ்ந்த செயல்கள் உரத்துப் பேசினவா? அனைத்துமே உரத்துப் பேசின. ஒன்று மற்றையதன் செழுமைக்கு உரமூட்டி நின்றது. அனைத்தும் அளவோடு இணைந்து அருங்கலை பிறந்தது.

நாடகம் என்பது நடிகனின் கலை எனப்படும். நாடக அரங்கில் நடிகனே முதன்மையானவன். ஏனைய அரங்கக் கலைகள் யாவும் நடிகரை முதன்மைப்படுத்துவதற்காகவும், அவர் மேடையில் நிகழ்த்தும் செயல்களுக்குத் துணைபுரியும் சூழலை வகுத்து, வரையறை செய்து கொடுப்பதற்காகவும் பயன்படுவன. வைரமுத்து அவர்தம் அரங்கம் நிச்சயமாக நடிகரின் அரங்கமாகவே அமைந்தது. வாழும் மனிதர்கள், வாழ்ந்த மனிதர்களின் வாழ்வில் நிகழ்ந்த இன்னல்கள், இடர்பாடுகள், மோதல்கள், மகிழ்வுகள், சோகங்கள் எனச் சுவைபட வந்தனவற்றையெல்லாம் தெரிவுசெய்து, ஒழுங்குபடுத்தி, ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்து வழங்க; நம்மையொத்தவரை மேடையிற் கண்டு அவர் பெறும் உணர்வுகளைத் தாமும் பகிர்ந்தும், புறத்தேயிருந்து பார்த்தும், அறிவாலும் உணர்வாலும் இணைந்தும் பிரிந்தும் இருக்கின்றதாலதோர் அற்புத அனுபவத்தைப் பார்வையாளரென வந்தவர் பெறுகின்ற இடமே அரங்கமாகும். இவ்வாறு, வாழ்ந்த மனிதர்களின் நிகழ்வுகளை, அவைதந்த அனுபவங்களை மேடையிலும் பார்வையாளர் கூட்டத்திலும் இருக்கும் மனிதர்கள் தம்முள் பகிர்ந்துகொள்ளுதல் என்ற நிலையினை அரங்கைத்தவிர வேறு எந்தவொரு கலையாலும் ஏற்படுத்தமுடியாது. இந்த அனுபவத்தினை வைரமுத்துவின் அரங்கம் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பல்லாண்டுகளாக வழங்கிவந்தது.

வாழ்வில் மனித இருப்பால் மனிதர்கள் பெறும் வாழ்க்கை அனுபவம் அரங்கில் ரசானுபாவமாகின்றது. அரங்கில் நிகழ்பவை, வாழ்வை ஒத்த நிகழ்வுகள் போல இருப்பினும் அவற்றினூடாக அரங்கில் உற்பத்தியாகும் அனுபவம் வெறும் வாழ்க்கை அனுபவம் போன்றதல்ல; அது அதனைவிட வேறுபட்ட ஒன்றாகவும், இன்பம் பயக்கும் ஒன்றாகவும் உள்ளது. அது, சிருஷ்டியால் விளையும் கலானுபவமாகவும் தீக்காய்வான் போன்று பார்வையாளர் மிதமான தொலைவிலிருந்து பெறும் சுகானுபவமான அழகிய தூரத்தினை (Aesthetic distance) சரியான சமநிலையில் வைத்து வழங்கவல்லவரே அரங்கில் சிறந்த கலைஞராகக் கணிக்கப்படுகின்றார். வைரமுத்து அவர்கள் காலத்தில், அரங்க அனுபவத்தால் ஆற்றலால் வளர்த்து எடுத்துக்கொண்ட



மோடியுற்ற நடிப்பு முறைமையாலும் ஏனைய அரங்கக் கலைகளின் சமநிலைப்பாட்டாலும், பார்வையாளரை மிதமான அழகியல் தொலைவில் வைத்து, அவர்களுக்கு அரங்க அனுபவ இன்பத்தை வழங்கினார். மனித நிலைப்பட்ட நிலையினை மிகவும் ஆழமாக அரங்கில் பிரதிநிதித்துவப்படுத்தியதன் மூலம் அவரால் இதனைச் சாத்தியமாக்க முடிந்தது.

இசைநாடக அரங்கம், வைரமுத்து அவர்களின் அரங்கமானது, வெறும் விபத்தல்ல. அது காலத்தின் தேவை உணர்ந்த ஒரு கலைஞனால், பண்பாட்டின் ஆழமறிந்த ஒரு மனிதனால், எண்ணிக் கருதி வளர்த்தெடுக்கப்பட்ட ஒன்றாகும். அரங்கம் என்பது, அதனை உற்பத்தியாக்கும் சமூகத்தின் பிரதிபிம்பமன்றி வேறொன்றுமல்ல என்பதால் காலத்தோடு அரங்கம் மாற்றமடைகிறது. ''பாரம்பரியத்தில் எள்ளளவும் மாற்றம் வேண்டாம்'' எனும் வைதிகவாத வெறும்போக்கு வைரமுத்து அவர்களிடம் இருக்கவில்லை. பாரம்பரியம் என்பதே காலத்தோடு, காலமாற்றத்தோடு, மக்கள் வாழ்வோடு கலந்து பின்னிவளர்ந்துவரும் ஒன்றாகும். வளர்ச்சி என்பது மாற்றம் என்பதாகும். இந்த வகையில், வைரமுத்து அவர்கள் இசைநாடக அரங்கின் மூலப்பண்பு எந்தவகையிலும் மாறுபடாதவாறு, அதனை மேலும் செழுமையுறச் செய்வதற்கு வேண்டிய மாற்றங்களைக் காலத்தை அறிந்து அனுசரித்துச் செய்துவந்தார். அதனால் அது இருபதாம் நூற்றாண்டின் கடைக்கூறுவரை வீரியத்தோடு வாழும் வலுவைப் பெற்றது. அரங்கில் அனுபவிக்கப்படுகிற நாடகமென்பது, கலைஞருக்கும் பார்வையாளருக்குமிடையில் இடம்பெறும் 'கொடுக்கல் வாங்கல்' எனப்படும்; அதாவது பரஸ்பர ஊடாட்டமும், பரஸ்பர ஐக்கியமும் இனங்கண்டுகொள்ளலும் நிகழ்வதாகும். இந்த நிலைமை ஏற்படுவதாயின் அரங்கில் நிகழ்த்தப்படுபவையும், அவை நிகழ்த்தப்படும் முறைமையும் மக்களுக்குப் பரிச்சயமானவையாகவும், புரியும்படி உள்ளனவாகவும் இருக்கவேண்டும். வைரமுத்து அவர்கள் தமது அரங்கில் நடிப்பால், வேடஉடுப்பால், ஒப்பனையால், காட்சியமைப்பால், பாடும் வகையால், மேடை அசைவால் நிகழ்த்தப்படும் முறைமையில் செழுமையான மாற்றங்களைச் செய்தார். அதனால் அவரது அரங்கு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வாழ்ந்தது.

வைரமுத்து அவர்களின் அரங்கம், தொல்சீர்காலத்துக் கிரேக்கத்தின் அவலச்சுவை அரங்கம் போன்று இருந்தது. ஐதீகம் அல்லது கதைப் பொருள், புராண இதிகாச நிகழ்வுகளைக் கூறுவனவாகவும், வரலாற்று நிகழ்வுகளைக் கூறுவனவாகவும் இருந்தது. அதனால் அக்கதைகள் மக்களது பண்பாட்டுடன் இணைந்தனவாக, அவர்கள் நன்கு அறிந்தனவாக இருந்தன. எனவே, கதையை அறியவேண்டுமென்ற ஆவல் மக்களுக்கிருக்கவில்லை. அக்கதைகள் எவ்வாறு அரங்கில் நிகழ்த்திக்

காட்டப்படுகின்றன என்பதைக் கண்டுகளிக்கவே மக்கள் அரங்குக்குச் சென்றனர். முன்னர் இவற்றை நிகழ்த்திய நடிகர்களின் ஆற்றல்களோடு இவர்களை ஒப்பிட்டுப் பார்க்கவும் செய்கிறார்கள். ஆகவே அரங்கில் நிகழ்த்துவோர், தமது தனிப்பட்ட ஆற்றல்களைக் கொண்டு பாடல், நடிப்பு, காட்சியமைப்பு என்பவற்றில் தீவிர அக்கறை செலுத்தவேண்டியவர்களாக இருந்தனர். தமது திறமைகளால் மக்களின் கவனத்தை ஈர்த்தனர். இந்த வகையில் வைரமுத்து அவர்கள் சிறந்தவோர் நடிகராக அரங்கிலும், மக்கள் மனங்களிலும் இடம்பிடித்துக்கொண்டார். அவர் ஏற்று நடித்த நடிகபாகங்கள் அனைத்துமே இதற்குச் சான்றாக இருப்பினும், மயானங்காத்த அரிச்சந்திரன் மக்கள் மறக்கமுடியாத ஒருவனாகிவிட்டான். வைரமுத்து அவர்களின் ஆற்றல் அப்பாத்திரத்தை ஒரு அவல நாயகனாக உயர்த்திவிட்டது. இது வைரமுத்து அவர்களின் கலைத்திறனுக்கோர் சான்று.

அரங்கம் என்பது, நிகழும் கணத்திலேயே, வாழ்வைப்போன்று அழிந்துகொண்டு செல்லும் ஒன்றாகும். அது நிகழ்த்தப்பட்டுவிட்ட மறுகணமே நிகழ்த்தியோரதும், பார்த்தோரதும் மனங்களில் மட்டும் நின்று நிலைக்கும் ஒன்றாகும். இன்று வைரமுத்துவின் வாழ்வும், அவர் வாழ்ந்த அரங்கமும் மக்கள் மனங்களில் மட்டுமே வாழ்கின்றன. அதை மனங்கொண்ட மக்கள் சாசுவதமானவர்களல்லர். வைரமுத்து அவர்கள் மேடையில் மக்களோடு ஏற்படுத்திக்கொண்ட உறவு அவரோடும், அம்மக்களோடும் மறைந்துவிடும். ஏனெனில் பார்வையாளருக்கும் நடிகருக்குமிடையில் நிலவும் - அரங்கின் மையப்பொருளாக விளங்கும் – அந்தப் பூடகமான இரண்டறக் கலத்தல் நிலையை, எவராலும் மீளச்சிருஷ்டிக்கமுடியாது. எனவே இவ்வரங்கு பற்றிய வரலாற்று ரீதியான ஆய்வு, அவசியமாகின்றது. ஏனெனில் ஒரு கலை பற்றிய வரலாற்று அறிவும், அதன் கோட்பாடுகள் பற்றிய தெளிவும், நிச்சயமாக ஒரு கலைப்படைப்பைக் கூர்ந்து நயப்பதற்கும், அதுபற்றிய கருத்தை ஆளமானதாகவும், பயனுடையதாகவும் ஆக்க உதவும் என்பது உண்மையாகும். இவ்வாய்வினை மேற்கொள்வது அறிஞர் பணி.

ம. சண்முகலிங்கம் (குழந்தை)
விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்



## ஊருக்குப் பெருமை சேர்த்த உத்தமன்

"புத்தடியிற் போயெடுத்துப் புத்திரனைக் கண்டெடுத்துப்
பெத்தகடன் தீர்த்து வாறேன் போகவிடை தாருமையா"
— சந்திரமதி

காலகண்டையர் உறுமி விழித்து ஆக்ரோசத்துடன் நிற்கிறார். அவர்முன், கொடிபோலத்துவண்டு வாடிய நிலையில் கெஞ்சிக் கதறிய வண்ணம் ஓர் இளம்பெண் காட்சி தருகிறாள். உள்ளத்தை உலுக்கும் காட்சியிது. காண்பவர்கள் கண்கள் கலங்கி நீரை மல்கின்றன. ஏன் ஒரு சிலர் அழுதே விட்டனர். நானும் கூடத்தான் நெஞ்சம் கனக்க, நீர் சிந்தும் கண்களுடன் இந்த அற்புதமான நடிப்பை மேடையில் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

இது நடைபெற்றது இன்று நேற்றல்ல. நான் சிறுமியாக இருக்கும் போது கிட்டத்தட்ட நாற்பது வருடங்களுக்கு முன்னர் நடந்தது. இத்தகைய உள்ளத்தைப் பிழியும் காட்சியில் பெண்பாத்திரமேற்று நடித்தவர் வேறுயாருமல்லர். நடிகமணி வைரமுத்துதான்.

வி. வி. வைரமுத்துவை மேடையில் அரிச்சந்திரனைப் பார்த்தவர்களுக்கு அதுவே பெரிதாகத் தெரிகிறது. ஆனால் அவர் பெண்பாத்திரங்களை ஏற்று நடித்த கண்ணை விட்டகலாக் காட்சிகள் இன்றும் உள்ளத்தைத் தொடுவன. ஆடிப்பாடி நடிக்கும் எழிலார் கன்னியாக, ஓடத்தில் போகும் ஓர் அபலைப்பெண்ணாக, மயானத்தில் கதறும் சந்திரமதியாக, கவண் வீசிக் கல்லெறியும் வள்ளியாக, பின்னலிட்டுக் குஞ்சம் கட்டி, ஒட்டியாணம் முதலிய நகைகள் அணிந்து, பளபளக்கும் பட்டுச் சேலையின் தலைப்பைச் சுழற்றியும் வீசியும் ஒய்யாரமாக ஆடிப்பாடிக் காதல்மொழிபேசும் கவர்ச்சிக் கன்னியாகவும், யமனோடு வாதிடும் வீரப் பெண்ணான சாவித்திரியாகவும் அவர் அரங்கில் காட்சி தந்த போதெல்லாம் அவரை ஆடவர் என்று யாரும் நினைப்பதில்லை. எல்லோரையுக் மயக்கும் இனிய பிசிறு தட்டாத குரலில் அவர் பாடும் போதும் அதற்கேற்ப ஆடும்போதும் பெண்களுக்கேயுரிய நளினத்தோடும் தேஜஸோடும் விளங்கினார். அந்த எழிலை அவர்தம் புத்திரிகளிடம் மட்டுமன்றி எந்தப் பெண்களிடமுமே நான் இதுவரை கண்டதில்லை.

இத்தகைய ஓர் அருமருந்தன்ன கலைஞன் பிறந்த மண்ணில் நான் பிறந்ததையிட்டுப் பெருமைப்படுகிறேன். இந்த மண் இவரைப் போன்ற எத்தனையோ கலைஞர்களைத் தந்த பெருமையுடையது.

அந்தக் காலத்தில், எங்கள் ஊர் இளம்பெண்கள் கூத்துப்பார்க்க ஆசைப்பட்டாலும், பெரியவர்கள் அனுமதிப்பதில்லை. அது சமூக நியதியாகவிருந்தது. பெரும்பாலும் வைரமுத்து குழுவினரின் நாடகங்கள் பல எங்களுடைய வீட்டு எல்லையில் நடைபெற்ற காரணத்தால் அவற்றைப் பார்த்து ரசிக்கும் வாய்ப்பு எனக்குச் சிறுவயதிலேயே கிடைத்தது. நான் மேடைகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தத் தொடங்கிய பின் அதே மேடையில் வைரமுத்துவின் நாடகமென்றால், எவ்வளவு நேரமானாலும் நாடகத்தைப் பார்த்த பின்னரே செல்வதுண்டு.

மேடையில், சாதாரண வைரமுத்துவைப் பார்க்க முடியாது. நடிக்கும் பாத்திரத்தைத்தான் பார்க்க முடியும். நடிப்பின் உச்சக்கட்டத்தில் முத்துமுத்தாக வியர்வைத்துளிகள் புறப்படும். அதில் மின்னொளி பட்டுத் தெறிக்கும். இதுவும் ஒரு மேக்கப் தானோ என ஐயுறும் வண்ணம் வரிசை வரிசையாக வியர்வை முத்துக்கள் தகதகவென ஜொலிக்கும். உடலசைவு, முகபாவம் மட்டுமல்ல, அவரது முதுகுத் தசைகளும் உணர்வுகளை வெளிக்காட்டி நடிக்கும்

இந்த உயர்ந்த கலைஞரிடம் சிறிதும் தற்பெருமை இருக்கவில்லை. கொஞ்சம் உயரத் தொடங்கியவுடனேயே "மற்றவர்களுக்கு என்ன தெரியும்" என்று பீற்றித் திரியும் பலர் வாழும் இவ்வுலகில் கொஞ்சமும் இறுமாப்பில்லாது, வைரமுத்து வாழ்ந்தார். அவருடைய எளிமை பொறுமை, எவரையும் போற்றி மதிக்கும் பண்பு என்பனவே அவரைப் புகழின் உச்சிக்கு இட்டுச் சென்றதெனலாம்

இவருடைய திடீர் மறைவு கலையுலகிற்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். அன்னாருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

— குருமகள்

கோப்பாய்
1-8-99

திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம்
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரியகலாசாலை



## அடக்கத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு

நடிகமணி வைரமுத்து அவர்களை நான் மிகவும் நேசித்தேன். அவரும் என்னை நேசித்தார். அடிக்கடி சந்தித்து நேரங்கழிவது தெரியாமல் பேசிக்கொண்டிருப்போம்.

அவர் சிறிது நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் மரணத்தைப்பற்றியும் மனந்திறந்து பேசினோம். இரண்டொரு சந்தர்ப்பங்களில் நான் அவருக்குக் கூறினேன். "உங்களுடைய மரணச்சடங்கில் கலந்து கொள்ள தமிழினமே திரண்டு வரும். பெரிய பிரமுகர்கள் இரங்கலுரை கூற வருவார்கள். உங்கள் வீட்டைக் கொஞ்சம் திருத்திக்கட்டுங்கள்" என்று.

அவருடைய பிள்ளைகளும் விரும்பியதால் வீடு திருத்திக் கட்டப்பட்டது. கட்டிட வேலைகளை ஆரம்பித்து வைக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியது.

நான் கூறியது போலவே அவருடைய மரணச்சடங்குகளில் பங்குபெற கல்விமான்களெல்லாம் திரண்டு வந்தார்கள். ஊரெங்கும் இரங்கல் கூட்டங்கள் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் கூட அவருடைய மறைவுக்கு அனுதாபந் தெரிவித்த வண்ணமிருக்கிறார்கள்.

இலங்கை வாழ் தமிழினம் அமைதியையும், சமாதானத்தையும் காணும்நாள் எந்நாளோ என்று ஏங்கித் தவித்தவர் நடிகமணி. அந்நிகழ்வுகளைக் காணாமலேயே எம்மை விட்டுப்பிரிந்து சென்று விட்டார்.

நடிகமணியைப்போல் கள்ளங்கபடமற்ற, உள்ளத் தூய்மையுடைய ஒருவரைக் காண்பதரிது. உள் அழகிலும் புற அழகிலும், தான் மேற்கொண்ட நாடக பாத்திரமாகிய, அரிச்சந்திரனாகவே திகழ்ந்தார். பொறுமை காரணமாக, தன்னை வெறுத்தவர்களைக் கூட சிலாகித்துப் பேசத் தெரியாதவர்.

காங்கேசன்துறைக்கு நடிகமணி ஈட்டித்தந்த பெருமைக்கும், புகழுக்கும் ஈடிணை இல்லை. நாடகத்துறைப் பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து, இசைநாடகத்துக்குப் புதுமெருகேற்றி, அக்கலையை வாழ வைத்து, அதற்குப் பேராசானாகவும் திகழ்ந்த நடிகமணிக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு சிலை நிறுவவேண்டும். வெளிநாட்டில் வசிக்கும் இவ்வூர் இளைஞர்கள் இப்பணியை நிறைவேற்றுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

இத்தினத்தில் அவர் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போமாக!

காங்கேசன்துறை.

அ. குமரகுரு
சட்டத்தரணி (அட்வகேட்)

நாடகத்தில் ஞானியும் இருப்பான்; வில்லனும் இருப்பான்; கோமாளியும் இருப்பான். நாடக முடிவில் தீயவர்களுக்குத் தண்டனை கிடைக்கும். அதைப் போலத்தான் ஒழுக்கமுள்ள நூலுக்கு மக்களிடையே வரவேற்புக் கிடைக்கும்.

சான் காடினர்



## வைரமுத்து ஒரு வரலாற்று நாயகன்

நாடகக் கலைபூக்கும் புகழுக்குரியது காங்கேசன்துறை. 1800 ஆம் ஆண்டளவிலேயே நாட்டுக்கோட்டைச் செட்டிமாரால் அழைத்து வரப்பட்ட இந்தியக் கலைஞர்கள் இந்த மண்ணில் இசை நாடகங்களை மேடையேற்றினர் எனத் தெரிய வருகிறது. இவர்களுட் பலர் ஈழத்திலேயே தங்கிவிட்டனர். இவர்களிடமிருந்து ஈழத்தவர்களும் நாடகக் கலையைக் கற்றுவளர்க்கலாயினர். அத்தகையோருள் நடிகமணி வி. வி. வைரமுத்துவின் பரம்பரையினரும் அடங்குவர்.

நடிகமணி வைரமுத்து இசைநாடகப் பரம்பரைரைச் சேர்ந்தவர். இவருடைய பேரனார் வைரவி, தந்தையார் வேலப்பா, மாமன்மார் இராமர், பிள்ளைநாயகம் எல்லோருமே நாடகக்கலைஞர்கள். இவருடைய ஒரேயொரு சகோதரர் (தமையனார்) வி. வி. காசிநாதனும் சிறந்த மிருதங்க வித்துவானாக விளங்கியவர்.

நடிகமணி வைரமுத்து 1924 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி வேலப்பாவுக்கும், ஆச்சிகுட்டி அம்மையாருக்கும் இரண்டாவது புதல்வனாகப் பிறந்தார்.

1929 ஆம் ஆண்டு நடேஸ்வராக் கல்லூரியில் இவர் ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். சிறுவயதிலிருந்தே படிப்பில் கவனஞ் செலுத்தாமல் விளையாட்டிலும், நாடகங்களைப் பார்ப்பதிலும் அக்கறை காட்டிய இவரை எப்படியாவது படிப்பித்து அரசாங்க உத்தியோக மொன்றிலமர்த்த வேண்டுமெனத் தந்தையார் விரும்பினார். ஆகவே தமது குடும்ப நண்பரும், உறவினருமாகிய அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஆசிரியர் க. முருகேசுவிடம் வைரமுத்துவை ஒப்படைத்துக் கற்பிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

ஆசிரியாவர்கள் இப்பொறுப்பை ஏற்று 1932 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திருந்து கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் கல்வியைத் தொடர வைத்தார். இங்கே கல்வி கற்கும் காலத்தில் வைரமுத்து சங்கீதத்திலும் நாடகத்திலும் காட்டிய ஈடுபாடும் திறமையும் போற்றுதற்குரியன. கலைத்துறையில் வைரமுத்து பிரகாசிப்பதற்கு வழிசமைத்துக் கொடுத்த பெருமை ஆசிரியர் முருகேசுவுக்கே உரியது. கற்பிக்கும் பொறுப்பை ஏற்ற இவர் காலப்போக்கில் இவரை வளர்க்கும் தந்தை

யாகிவிட்டார். வைரமுத்துவை வளர்த்து ஆளாக்கித் திருமணமும் செய்துவைத்தவர் ஆசிரியரவர்களே 1944 ஆம் ஆண்டு அல்வாயில் இரத்தினம் எனும் அம்மையாரைத் திருமணஞ் செய்தார். இவருக்கு ஐந்து பெண்களும் ஒரு மகனும் உள்ளனர். (விபரத்தை நூலின் பிறிதோரிடத்தில் பார்க்கவும்)

மாமனார் பிள்ளைநாயகத்திடம் கர்நாடக இசையை முறையாக வைரமுத்து கற்றார். ஹார்மோனியம், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களை வாசிக்கவும் இவரிடமே கற்றுக் கொண்டார். வயலின் வாத்தியத்தை மாவிட்டபுரம் வித்துவான் உருத்திராபதியிடம் பயின்றார்.

கல்லூரி நாடகங்கள் அனைத்திலும் பங்குபற்றிய வைரமுத்து இசைக்கச்சேரிகளையும் செய்துவந்தார். மிகவும் சிறுவயதிலேயே நாடகங்களுக்கு ஆர்மோனியம் வாசிக்கத் தொடங்கிய இவரைப் பாராட்டாதவர்களே இல்லை.

1938 ஆம் ஆண்டு தமது 14 ஆவது வயதிலேயே 'சங்கீத கோவலன்' என்னும் நாடகத்துக்கு ஹார்மோனியம் வாசித்துப் புகழீட்டினார் என இப்பொழுதும் இந்நாடகத்தைப் பயிற்றிய அண்ணாவியார் வசாவிளான் மார்க்கண்டு கூறிப் புளங்காகிதம் அடைகின்றார்.

1941 ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்ற வைரமுத்து 2 வருடங்கள் மதுரையில் தங்கி செல்லப்பாபிள்ளை என்னும் வித்துவானிடம் கர்நாடக இசையை விரிவாகக் கற்றார். இசைநாடக நுணுக்கங்களையும் இங்கே கற்றுக் கொண்டார். மதுரைத்தமிழ் சங்கப் பாலபண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

இந்தியாவிலிருந்து திரும்பிய இவர் இசைநாடகங்களுக்கும் நாட்டுக் கூத்துக்களுக்கும் தாளக் காவடிகளுக்கும் ஹார்மோனியம் வாசித்தும் பக்கப்பாட்டுப் பாடியும் வரலானார். இலங்கை வானொலியிலும் கர்நாடக இசைக்கச்சேரிகளை நிகழ்த்தி வந்தார்.

இயல்பாகவே நடிப்பில் விருப்பமுடைய வைரமுத்து ஆரம்பத்தில் பெண் பாத்திரங்களையே ஏற்று நடித்தார். தேகம் சிறிது பருக்கப் பெண் பாத்திரங்களை விடுத்து 'ராஜபாட்' பாத்திரங்களை ஏற்று நடிக்கலானார்.

ஒருநாள் இவர் நடித்த 'சம்பூர்ண அரிச்சந்திரானவ' பிரபல எழுத்தாளர் 'இலங்கையர்கோன்' பார்க்க நேரிட்டது. 'இப்படியொரு அற்புதமான கலைஞன் நம்மிடையே இருக்கிறானே'' என அவர் ஆச்சரியப்பட்டார். இது நிகழ்ந்தது 1952ஆம் ஆண்டு. வைரமுத்துவின்



ஆற்றலைப் பற்றி, இலங்கை வானொலியில் தமிழ் நாடகத் தயாரிப்பாளராக இருந்த 'சானா'வுக்கும் (சண்முகநாதன்) பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கும் இலங்கையர்கோன் எடுத்துக்கூறினார்.

மேற்படி மூவரும் இணைந்து தீபாவளி வானொலிக் கலைவிழா ஒன்றை 1953 இல் நடத்தினர். அதில் வைரமுத்துவின் 'மயான காண்டம்' சிறப்பாக இடம்பெற்றது. இவருடைய இசை ஞானத்தை ஏற்கனவே வானொலி நேயர்கள் அறிந்திருந்தபோதும், மயானகாண்ட நாடகப் பாடல்களே இவருக்குப் புகழ் தேடிக் கொடுக்கத் தொடங்கின.

பேராசிரியர் சு. வித்தியானந்தன், இவருடைய குழுவினரை அழைத்து மயானகாண்டம், பக்த நந்தனார், சத்தியவான் சாவித்திரி ஆகிய நாடகங்களைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1960 ஆம் ஆண்டிலிருந்து பல தடவைகள் மேடையேற்றினார். இதன் பின்னர் வைரமுத்து அடிநிலை மக்கள் மத்தியில் மட்டுமன்றிப் படித்த உயர்மட்ட மக்கள் மத்தியிலும் புகழ்பெறத் தொடங்கிவிட்டார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் தமது கட்டுரையொன்றில் ''திரு. வைரமுத்து இந்தியாவில் பிறந்திருந்தால், இப்போது பிரபல சினிமா நட்சத்திரமாக விளங்கியிருப்பார். நல்ல காலம் அவ்வாறு நடைபெறவில்லை. நடிகமணி ஈழமண்ணிலே பிறந்தது எமது பாக்கியம்'' எனக் கூறியிருப்பது உண்மையே.

வைரமுத்துவுடைய 'மயானகாண்டம்' மட்டும் மூவாயிரம் தடவைகளுக்கு மேல் மேடையேறியுள்ளது. மயானகாண்டம் தவிர பக்த நந்தனார், சத்தியவான் சாவித்திரி, பூதத்தம்பி ஆதிய நாடகங்களும் இவருக்குப் பெரும் புகழும் ஈட்டிக்கொடுத்தன.

வைரமுத்துவைப் பாராட்டிப் பல கலாமன்றங்கள் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தன. 1960 ஆம் ஆண்டு கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் நெல்லியடியில் வைத்து வழங்கிய 'நடிகமணி' என்னும் பட்டமே நிலைத்துவிட்டது. இது தவிர நடிப்பிசைச் சக்கரவர்த்தி, நாடகரத்னு, கலைக்கோமான், நாடகமணி, நாடகவேந்தன் ஆகிய பட்டங்களும் இவருக்கு வழங்கப்பட்டன. 11-02-84 ஆம் திகதி இவருடைய மணிவிழா கோலாகலமாகக் காங்கேசன்துறையில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான இவருடைய இரசிகர்கள் இவ் விழாவில் பங்குபற்றிக் கௌரவித்தனர்.

நடிகமணியின் பாடல்களைக் கொண்ட ஒலிப்பதிவு நாடாக்கள் இலண்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. 1959 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த பிரித்தானிய ஒலிபரப்பு நிலையத்தார் (B. B. C.) மயானகாண்டத்தை

ஒளிப்பதிவு செய்து சென்றனர். இதனை இலண்டன் தொலைக்காட்சி நிலையம் ஒளிபரப்பி வைரமுத்துவின் கலைத்திறனை உலகறியச் செய்தனர்.

தமிழகத்தின் தலைசிறந்த நடிகர்களாகிய டி. கே. பகவதி, டி. கே. சண்முகம், குலதெய்வம் இராசகோபால், அசோகன், நாகேஷ் ஆகியோர் இவருடையநடிப்பைப் பார்த்து வியந்து போற்றினர். இவ்வாறு இவர்கள் பாராட்டுவதற்குரிய காரணமென்ன?

வைரமுத்து நடிப்பில் தனக்கென ஒரு பாணியை அமைத்துக் கொண்டார். அது தனித்துவமானது. பிறரால் பின்பற்ற முடியாதது.

முன்னுள் இசைநாடக நடிகர்களைப் போல் இசைக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல் நடிப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்தார்.

நாடகத்துடன் சம்பந்தப்பட்ட அத்தனை கலை நுணுக்கங்களையும் அறிந்திருந்தார்.

நவீன உத்திமுறைகளைக் கையாண்டு நாடகத்தை மேடையேற்றினாலும் பழைய நாடக மரபுகளையும் பொன்னெனப் போற்றிவந்தார்.

நாடகங்களைச் சுருக்கியமைத்து இரண்டொரு மணித்தியாலங்களில் சுவைபட நடித்துக் காட்டினார்.

இவை எல்லாவற்றையும் விட நாடகக் கலையை உயிரெனப் போற்றி வந்தார். சக கலைஞர்களையும் பெரியவர்களையும் மதித்து வந்தார்.

''என்றும் பணியுமாம் பெருமை'' என்பதற்கு உதாரண புருஷராக வாழ்ந்து வந்தார்.

இலங்கை வானொலி மூலமும் ரூபவாஹினி மூலமும் புகழ் பெற்ற வைரமுத்து கலைவாழ்வையே தமது வாழ்வாகக் கொண்டு வாழ்ந்தவர். இன்று எம்மிடையே இருந்த ஒரேயொரு தமிழ் தொழில்முறை நடிகரும் இவரே. ஏனையோர் வேறு தொழில்களைச் செய்து கொண்டு நாடகத்தைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர். ''இறுதி மூச்சு வரை கலைக்காகவே வாழ்ந்த வைரமுத்துவுடன், நாடக வரலாற்றில் ஓர் அத்தியாயம் முடிவடைந்துவிட்டது'' எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறியது சாலப் பொருந்தும்.

காரை. செ. சுந்தரம்பிள்ளை



## நடிகமணியும் வசந்தகான சபாவும்

இசை நாடகக் கலைஞராகிய அமரர் வி. வி. வைரமுத்து பரம்பரை அண்ணாவிமாராகிய வைரவி, இராமர் ஆகியோரது வழித்தோன்றலாவர். இவர் 1953ஆம் ஆண்டு இலங்கையர்கோனின் துணையுடன் காங்கேசன்துறை ''வசந்தகான சபா''வை நிறுவினார். இச்சபா முதலில் மேடையேற்றிய நாடகம் 'மயானகாண்டம்' ஆகும். இந்நாடகம் பேராசிரியர் சு. வித்தியானந்தன், இலங்கை வானொலியில் தமிழ் நாடகத்தயாரிப்பாளராகவிருந்த 'சானா' (சண்முகநாதன்) எழுத்தாளர் இலங்கையர்கோன் ஆகியோரின் கூட்டுத்தயாரிப்பாகும். 1953 ஆம் ஆண்டு தீபாவளிக் கலைவிழாவின்போது யாழ் நகரமண்டபத்தில் மேடையேறிய மயானகண்டம் நடிகமணி வைரமுத்துவுக்கும் வசந்தகான சபாவுக்கும் பெரும்புகழீட்டிக் கொடுக்கத் தொடங்கியது.

'வசந்தகான சபா'வை ஆரம்பிக்குமுன் பலமுத்த கலைஞர்களுடன் சேர்ந்து பக்கவாத்தியக்காரராகவும் நடிகராகவும் கலைப்பணிபுரிந்தார். இவருடைய கலைப்பணி 1937, 38 ஆம் ஆண்டுகளிலேயே ஆரம்பமாகிவிட்டது.

'வசந்தகான சபா' பல முன்னணி நடிகர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. கரவெட்டி நற்குணம், வசாவிளான் ப. மார்க்கண்டு, அரியாலை இரத்தினம், பருத்தித்துறை பபூன் சின்னத்துரை அமரர் செல்வராசா, சி. பத்மாவதி ஆகியோர் முக்கியமானவர்கள். காலப்போக்கில் வேறும்பல நடிகர்கள்]சபாவில் உறுப்பினர்களாகத் தொடங்கினர். அவர்களுள் வி. என் செல்வராசா அரியாலை செல்வரத்தினம், இணுவில் கனகரத்தினம் சிதம்பரம் செல்வராசா, மாவைகலட்டி செல்வரத்தினம், நவாலி தைரியநாதன், எம். எஸ். இராசையா சி. புஸ்பராஜா, பி. வரதராஜா, விமலநாதன், பூதப்பிள்ளை நாகரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

'வசந்தகான சபா' நாடகங்களில் நடிகமணியின் புதல்விகள் வசந்தா, லலிதா ஜெயந்தா ஆகியோரும் புதல்வன் சாரங்கனும் பங்கேற்று நடித்துள்ளனர்.

இலங்கையில், இசைநாடகத்துறையில் புகழ்பெற்ற பெண்கலைஞர்களாகிய கன்னிகா பரமேஸ்வரி, சந்திரா; மல்லிகா, சுப்புலட்சுமி

காசிநாதன், மணிமேகலை, மாலா, சகுந்தலா ஆகியோரும் சபா நாடகங்களில் முக்கிய பாகமேற்று நடித்துள்ளனர்.

'சங்கீத கோவலன்' என்னும் நாடகம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தால் நடிகமணியின் மரணத்துக்கு இரண்டொரு தினங்கள் முன்பதாக ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இந்நாடகத்தில் கண்ணகியாக திருமதி கமலினி செல்வராசா பங்கேற்று செய்தமை சபாவுக்குப் பெருமைதருஞ் செயலாகும். அமரர் வைரமுத்து இசை நாடக மரபை அனுசரித்து இக்கால ரசிகர்களின் ரசனைக்கேற்ற வகையில் புதிய அணுகு முறைகளைக் கையாண்டு நாடகங்களைத் தனது, சபா நடிகர்களுடன் சேர்ந்து நடித்து நாடளாவிய புகழை ஈட்டினர். தனது நடிப்பால் இசைத்திறந்தால், குரல்வளத்தால் கவர்ந்து, நடிகமணி, கலைக்கோமான், கலைமாமணி போன்ற பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்றுச் சபாவிற்கும் புகழையும், பெருமையையும் தேடித்தந்து நாடகக் கலையின் சிகரத்துக்கே சென்று விட்டார்.

வசந்தகானசபா 1966ம் ஆண்டளவில் தயாரித்த, பூதத்தம்பி நாடகத்தில் இது வரை காலமும் ஏற்ற அரிச்சந்திரன், சத்தியவான். கோவலன், நந்தன் பாத்திரங்களை விட வேறுபட்டதான பாத்திரத்தை ஏற்றிருந்தார். அந்திராசியெனும் அப்பாத்திரம் இவருக்கு மேலும் புகழீட்டிக் கொடுத்தது. சபா நாடகங்களுக்கு பிள்ளை நாயகம், நாகமுத்து' பிலிப், சின்னத்துரை ஆகியோர் ஆர்மோனிய வித்துவான்களாகவும், காசிநாதன், அருமைத்துரை பொன்னுச்சாமி போன்ற பலர் மிருதங்க வித்துவான்களாகவும் பணிபுரிந்தனர். அமரர் வைரமுத்து சபா நடிகர்களுடன் அன்பாகவும் பண்பாகவும் அவரவர் நோக்கங்களுக்கிணங்க ஏற்றது செய்து திருப்திகாண்பதில் திறமையுள்ளவராக இருந்து வந்தார்.

அவரது நடிப்பால் கவரப்பட்ட பல பெரியார்கள், அறிஞர்கள், பேராசிரியர்கள், நாடகத்துறையில் ஈடுபாடுள்ள கலைப்பெருமக்கள் ஆதரவும், நட்பும் செலுத்திவந்தனர். அவர்களுள் நடிகமணி தன் சொந்த மகனுகப் பாவித்த அமரர் கே. எம், வாசகர் நினைவு எப்பொழுதும் வசந்தகான சபா நடிகர்கள் உள்ளத்தில் நடிகமணி நினைவுள்ள வரை நிலைத்திருக்கும்.

ஈழத்தின் பல பெரியார்களால் பாராட்டப் பட்ட நடிகமணி பாரத நாட்டு முதுபெரும் அறிஞர் மா. பொ. சி, கலைஞர்கள் T. K. சண்முகம் சகோதரர்கள், குலதெய்வம் ராஜகோபால், டைக்ரர் சிறீதர், ஜெய்சங்கர், நாகேஸ், அசோகன் ஆகியோர்களாலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். மாதகலில் கந்தசாமி கோவிலில் கிருபானந்தவாரியார் அவர்கள் வாழ்த்தும் பாக்கியத்தையும் பெற்ருர்.



நிர்மலா எனும் திரைப்படத்திலும் நடிகமணி நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடிகமணி அவர்கள் தொடக்கிவைத்த காங்கேசன்துறை 'வசந்த கான. சபா', அன்னரது கலைப்பணியைத் தொடர்ந்து செய்யும். அதுவே அவருக்கு சபா செய்யும் கைம்மாருகும்.

காங்கேசன்துறை
1-8-89

வி. ரி. செல்வராசா
செயலாளர்
வசந்தகான சபார்

*கலை என்பது மக்களுடைய மனத்தில் சத்தியத்தைப் பற்றிய தெளிவையும் அதனை வாழ்வில் கடைப் பிடிக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துச் சொல்லும் ஒரு கருவியாகவே இருக்க வேண்டும். உண்மை எது, போலி எது, என்று தேர்ந்து தெளியும் அனுபவத்தைக் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.*

— சோக்கிரட்டீஸ்

## கண்ணில் மறைந்து
## கருத்தில் நிறைந்துவிட்ட
## நடிகமணி

எனக்கும் V. V. வைரமுத்துவுக்கும் நாற்பத்தைந்து வருடக்கலைத் தொடர்பு உண்டு. அல்லாமலும் எனது உறவினர், தம்பிமுறையான வர். முதலில் ஆர்மோனியம் வாசிப்பவராக, கலை உலகில் பிரவேசித் தார். பின்பு இடையிடையே இவரது நாடகங்களுக்கு ஆர்மோனியம் வாசித்திருக்கிறேன். கடைசியாக பதினைந்து வருடகாலம் நிரந்தரமாக இணைந்து ஆர்மோனியம் வாசித்திருக்கிறேன். இக்காலகட்டத்தில் பல விதமான, சுவையான அனுபவங்கள். இலங்கையில் எல்லாக்கலை அரங் குகளிலும் அவரது நாடகங்கள் மேடையேறியுள்ளன. தமிழர்களின் தாயகமான வடகிழ்மாகாணங்களில் வைரமுத்துவின் நாடகங்கள் நடைபெறாத இடமே இல்லை என்று சொல்லலாம். மயானத்து அரிச் சந்திரனை, எத்தனைமுறைபார்த்தாலும் சலிக்காது.

நாடகத்துறையில் மாத்திரமல்ல சாஸ்திரீய சங்கீதத்திலும் ஞானம் மிக்கவர். நல்லை ஆதீனத்தில் ஒருமுறை நடந்த இசைவிழாவில் சங் கீத வித்வான் பரம் தில்லைராசா அவர்கள் நடிகைமணியைக் கச்சேரி செய்ய ஒழுங்கு செய்திருந்தார். கச்சேரி முடிந்ததும் அங்கிருந்த கலை ஞர்கள் ''நடிகமணி! உங்களை நாடகநடிகர் என்று தான் எண்ணி யிருந்தோம். ஆனால் கச்சேரி செய்வதிலும் உள்ள ஆற்றலை இன்றுதான் கண்டோம்'' என்று பாராட்டினார்கள்.

கோவில் திருவிழாக்களில் வைரமுத்துவின் நாடகங்கள் அநேக மாக இடம் பெறுவதுண்டு. அந்தக் கோவில்களுக்கு வந்திருக்கும் நாதஸ்வரக்கலைஞர்கள், நடிகைமணியைக் கண்டால் சூழ்ந்து கொள் வார்கள். பிச்சையப்பா, பாலகிருஷ்ணன், கானமூர்த்தி சகோதரர்கள், மறைந்த மாமேதை, தவில்வித்துவான் தட்சணாமூர்த்தி, சின்னராசா சின் னக்கணேசு ஆகிய கலைஞர்கள், வைரமுத்துவுடன் கூடிய ஈடுபாடுள்ளவர் கள்.

ஒரு நாடகமேடைக்கு தனது சக நடிகர்களுடன் வந்தால் முதலில் மேடையைப் பார்வையிடுவார். பின்பு ஒப்பனை இடத்தை நோக்கு



வார். நடிகர்கள் ஒப்பனை செய்யத்தொடங்கிவிட்டால் அதை நோட்ட மிடுவார். நாடகம் தொடங்கியதும் மேடையில் அரைநிமிடந்தானும் தாமதம் ஏற்படாதவாறு காட்சிகள் தொடர்வதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருப்பார். பக்கவாத்தியங்களில் மிருதங்கம் ஒரு அணு அளவிலாகுதல் ஸ்ருதி இறங்கிவிட்டால் உடனே வந்து தானே அதை வாங்கி ஸ்ருதி சேர்த்துக்கொடுப்பார்

இவரது கடைசி நாடகம் சம்பூர்ண அரிச்சந்திரா மீசாலையில் இடம் பெற்றது. நான் கொஞ்சம் சுகயீன முற்றிருந்தேன். இதை அவதானித்த நடிகமணி மயானகாண்டம் வரையும், என்னை ஓய்வெடுக் கச் சொல்லிவிட்டுத்தானே முற்பகுதிக்கு ஆர்மோனியம் வாசித்தார். இப்படியான ஒரு மாமேதை எங்களையெல்லாம் நடுக்கடலில் தத்தளிக்க விட்டுவிட்டு அமரர் ஆகிவிட்டார். இந்த அதிர்ச்சியில் இருந்தும் மீள எவ்வளவு காலமாகுமோ தெரியவில்லை.

வாழ்க அவர்புகழ்! வாழ்க அவர்கலைப்பணி!

மயிலங்காடு
20-04-89

செ. சின்னத்துரை
ஆர்மோனிய வித்துவான்

> கலையின் எந்தக் கூறுபாட்டிலும், ஒரு தெளிவான, உறுதியான எண்ணப் பாங்கு வேண்டும் எழுதும் போதும் எதற்காக எழுதுகிறோம் என்ற ஞானம் வேண்டும்.
>
> — அன்ரன் செக்காவ்

## எங்கள் கலைத் தொடர்பு ......

1938 ஆம் ஆண்டு நடிகமணி வைரமுத்துவுடன் நடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது நான் தகப்பனாகவும் நடிகமணி மகனாகவும் நடித்தோம். அப்பொழுது அவருக்கு 13 அல்லது 14 வயதிருக்கும். அச்சிறு வயதிலேயே ஆர்மோனியம் நன்றாக வாசிப்பார். 1940 ஆம் ஆண்டு கட்டைப்பிராயில் ''சங்கீத கோவலன்'' நாடகத்தைப் பழக்கிக் கொண்டிருந்தேன். அந்நாடக ஒத்திகைக்கு அவர் ஆர்மோனியம் வாசித்தார். மூத்த கலைஞர்களான வைரமுத்துவின் தாய் மாமன் வ. பிள்ளைநாயகம் என்பவரும் பிலிப்பு, குண்டுமணி என்பவர்களும் இருந்தபோதிலும் நாடக நிர்வாகிகள் அந்நாடகத்தை அரங்கேற்றும்போது வைரமுத்து ஆர்மோனியம் வாசிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அச்சுவேலியைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை வைத்தியர் (ஆசை) என்பவர் நாடகத்தைப் பார்த்த பின்னர் என்னை அழைத்து ''யார் ஆர்மோனியம் வாசித்த பையன்'' என்று கேட்டார். 'காங்கேசன்துறைப் பிள்ளைநாயகத்தின் மருமகன்' என்றேன். 'வருங்காலத்தில் பெரும் புகழும் இவன் பெறுவான்' என்று அவர் அன்றே கூறினார். அது பொய்க்கவில்லை.

1940 க்குப் பின், நடிகமணி பெண்வேஷத்தில் நடிக்கத்தொடங்கினார். குறிப்பாக அவர் 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தில் சாவித்திரியாகவும் நான் யமனாகவும் நடிப்பது வழக்கம். 1943 க்குப் பின் வைரமுத்து சந்திரமதியாகவும் நான் அரிச்சந்திரனாகவும் ஏறக்குறைய நூறு தடவைகளுக்கு மேல் மேடையேறியிருப்போம். 1945 க்குப் பின்பு வைரமுத்து அரிச்சந்திரனாக நடிக்கத் தொடங்கினார். அன்றிலிருந்து நான் விஸ்வாமித்திரராகவோ, தோட்டியாகவோ, காலகண்ட ஐயராகவோ அரிச்சந்திரா நாடகத்தில் நடித்து வந்தேன். அவருடன் கூட நடிப்பதே தனி இன்பம். சக நடிகர்களை மதித்து உற்சாக மூட்டுவதற்கு இவருக்கு நிகர் இவரே.

காங்கேசன்துறை
1-8-89

வி. மார்க்கண்டு
வசந்தகான சபா நடிகர்



## கலைஞனின் மறைவு!

வாய்மைக்காக வாழ்க்கையின் சுகபோகங்களைத் துறக்கிறான் அரிச்சந்திரன்; நாடிழக்கிறான்; மனைவியை இழக்கிறான்; மகனை இழக்கிறான்; மயானம் காக்கிறான்! மகாராணியாக இருக்கவேண்டிய அவன் மனைவி சந்திரமதியோ கூலிவேலை செய்கிறாள்; விறகு வெட்டச் சென்ற மகன் பாம்புக் கடியால் மரணமாகிறான்.

இறந்த மகனையே முறையாகத் தகனம் செய்யமுடியாத நிலை, தன்னந்தனியாக, மகனின் உடலைத் தூக்கிச் செல்கிறாள் மயானத்திற்கு. மயானம் காப்பவன் தன் கணவன் என்று தெரியாத நிலை. கடமையுணர்வு மிக்க மயானம் காப்பவன் மனைவியையும், தனது மகனின் உடலையும் முதலில் அறியாத நிலையில் 'வைகாசை!'' என்று வலியுறுத்துகிறான். மனைவியையும் மகனையும் அடையாளம் கண்டபின் அவன்படும் பாடு – கடமை ஒருபுறம்; பாசம் இன்னோர்புறம்; தர்ம சங்கடநிலை

இந்த அற்புதக் காட்சியை அப்படியே தத்ரூபமாக எமது கண்முன்னே காட்டியவர்தான் எமது நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்கள்.

சாதாரண கரம்சந்த் காந்தியை மகாத்மாகாந்தியாக மாற்றியவை சில நிகழ்ச்சிகள். அதில் ஒன்றுதான் அரிச்சந்திரன் நாடகம். சிறு வயதிலே இந்த நாடகம் அவரது உள்ளத்திலே ஆழப்பதிந்துவிட்டது. உண்மைக்காகத் தியாகம் புரியவேண்டுமென்ற உத்வேகத்தை அவருக்கு அளித்தது. இதுபற்றித் தனது சுயசரிதையிலே சுவைபடக் கூறி வைத்தார்.

அன்றுதொட்டு இன்றுவரை அரிச்சந்திரன் நாடகம் பல மொழிகளில்; பல இடங்களில் நாடகமாக நடித்துக் காட்டப்பட்டது; சினிமாவாக வெளிவந்தது. ஆனால் நடிகமணியின் நடிப்பாற்றல், குரல்வளம், உணர்ச்சி வெளிப்பாடு மறைந்த அரிச்சந்திரனுக்கு உயிரூட்டி எங்கள் கண்முன்னே நிறுத்திவிட்டன.

கலைஞர் வைரமுத்து தனது வெற்றிக்கு ஒப்பனையை நம்பியிருக்கவில்லை; மேடைக் காட்சிச் சோடனைகளையோ படுதாக்களையோ நம்பியிருக்கவில்லை; புதுவகை இசைக் கருவிகளான டமாரங்களையோ, டப்பாக்களையோ நம்பியிருக்கவில்லை; வர்ணஜால ஒளிமயக்குகளை நம்பியிருக்கவில்லை.

இரவற் குரலோடு இன்று சினிமாவிற் பலர் கொடிகட்டிப் பறக்கிறார்கள். ஆனால் நடிகமணியின் குரல்வளம் கேட்கவும் வேண்டுமா? ''யாரடி கள்ளி நீ தான்'' இந்தப் பாடல் யாரைத்தான் உருக்கவில்லை; யாரிடம்தான் கண்ணீரை வரவழைக்கவில்லை? பொருளுணர்ந்து இசைப்பதற்கு இனி யார்தான் வருவார்கள்?

ரூபவாஹினியின் முதல் இசைநாடகம் நடிகமணியினது; ரூபவாஹினி பெருமை பெற்றுவிட்டது! நடிகமணியின் நாடகத்தை நேரிற் கண்டுகளிக்க முடியாத பலருக்கு நல்ல சேவை செய்துவிட்டது. நடிகமணியால் அது பெருமைப்படுவது நியாயம்தான்!

பலர் புகழ் தேடி அலைகிறார்கள்; சிலர்மீது புகழ் திணிக்கப்படுகின்றது; ஆனால் நடிகமணியோ புகழோடு தோன்றியவர்; பிறவிக் கலைஞர்.

தமிழ் மக்களின் பாரம்பரியக் கலைகள் புறக்கணிக்கப்படுவது பற்றிச் சில நாட்களுக்கு முன்தான் இப்பந்தியிற் சுட்டிக்காட்டினோம். அரசாங்கத்தின் புறக்கணிப்பு ஒரு புறம்; சினிமா போன்ற தற்காலப் புதுமைகளாற் பழமையான கலைகள் மறக்கப்படுவது இன்னொருபுறம். இந்த இக்கட்டான நிலையில், மணிவிழாக் கண்ட நடிகமணியின் மறைவு கலைத்துறைக்கு இழப்பு; தமிழரது பாரம்பரியக் கலைக்குப் பேரிழப்பு!

நன்றி: ஈழநாடு 11-7-89

உலகமே நாடகமேடை - இங்கே
உள்ளவர் யாவரும் நடிகர்களாவர்

— சேக்ஸ்பியர்



## தமிழ்க்கலை உலகின் இழப்பு

ஈழத் தமிழ்க் கலை உலகின் பிரகாசம் மிக்கபெரு நட்சத்திரம் ஒன்று மறைந்து விட்டது. மிகக் குறிப்பாக, ஈழத் தமிழ் நாடகத் துறையில் ஒளிர்ந்த ஒப்பற்ற தாரகை ஒன்று இழக்கப்பட்டு விட்டது.

'மயான காண்டம்' புகழ் நடிகமணி வி. வி. வைரமுத்துவின் இழப்பை கலா ரசிகர்கள், கலைஞர்கள், கலாபிமானிகள் சார்பில் கவலையுடன் இங்கு பகிர்ந்து கொள்கிறோம்.

நடிகமணி ஈழத்தின் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத நாடகக் கலைஞன் என்பதில் கருத்து வித்தியாசம் இருக்க முடியாது.

அவர் தலை சிறந்த நடிகர்; திறமை மிக்க பாடகர்; நுட்பம் செறிந்த நாடக நெறியாளர், அவர் பாத்திரமாகவே மாறி நடிப்பதால் ரசிகர்கள் அந்த நடிப்புடன் ஒன்றித்து விடுவது வழக்கம்.

பல ரசிகர்கள் நடிகமணியின் மயான காண்ட நடிப்பைப் பார்த்து அதில் ஒன்றித்து, உணர்ச்சிவசப்பட்டு அழுதார்கள் என்றால் அது அவரது கலைத்துவத்தின் முழுமைக்குச் சான்றாக மிளிர்ந்தது.

அவரது குரல் சிம்மக் குரல். அவரது இசை வளம் கானமிர்தம், இராகம், தாளம், சுருதி பிசகாமல் இசை வெள்ளத்தை ரசிகர்கள் காதில் இறைத்தவர் அவர்.

அவர் ஒரு முழுமையான நாடகக் கலைஞர் என்பதை விட கலையில் ஊறியவர். கலையுடன் ஒன்றித்தவர் என்பதே மிகப் பொருத்தம். அவரே நாடகக்கலை. நாடகக் கலையே அவர் என்ற அளவுக்கு அக்கலையில் அவர் செம்மை செறிந்து விளங்கினார்.

நடிகமணி கலையுடன் ஒன்றித்ததால், கலைக்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர். நாடகக்கலையே தமது உயிர்மூச்சாக வாழ்ந்தவர். ஈழத் தமிழ் நாடகத்துறையில், சபா நாடக முறையை அழிய விடாது காத்து வந்தவர். அதனால் அவருக்கு ஈழத்தின் தமிழ்க் கலை உலகில் ஒரு தனி இடம் எப்போதும் உண்டு. அவர் கலையை நேசித்

தார். அதனுல் அதனைப் பேண வேண்டும் வளர்க்க வேண்டும் என்று உழைத்தார். அதனுல் நாடகத்துறையில் ஒரு சகாப்தத்தை உருவாக்கினர்.

தமிழகத்தின், நாடக, சினிமாக கலைஞர்கள் பலரையும் விஞ்சும் விதத்தில், அவரது நடிப்பு ஆற்றலும் திறமையும் மேலோங்கி, உயர்ந்து நின்றன. ஆனுல் அந்தத் திறமையை ஆற்றலைத் தமது தனிச்சொத்தாக வைத்திருக்காமல், ஈழத் தமிழர் கலை உலகின் பொதுச் சொத்தாக்கும் முயற்சியில் பலருக்கும் அக்கலையைப் பயிற்றுவித்தார். அந்தப் பணியைக் கூட ஆடம்பரமின்றி மிக அடக்கமாக அமைதியாக ஆற்றினர்.

ஆகையால், நடிகமணி வைரமுத்துவை ஒரு திறமையான கலைஞராக மட்டும் பார்ப்பது பொருந்த மன்று. ஈழத் தமிழ்க்கலை உலகின் பொதுச் சொத்தாகக் கருதி அவரது தொண்டு தொடர கலாபிமானிகள் கலைஞர்கள் உழைக்க வேண்டும்.

கலை உலகுக்கு அவர் ஆற்றிய பணிக்கு நன்றிக்கடன் செலுத்துவது கலைஞர்கள், கலாரசிகர்கள், கலாபிமானிகளின் கடமை என்றுகூடக் கூறலாம். அவருக்குச் சிலை வைப்பதைவிட அவரது கலைச்சேவையைத் தொடர்வது உரிய நன்றிக் கடனுகை இருக்கும்

சபா நாடகம் என்ற பழைய கலை அழியாமல் இருக்க அதனைப் பேணுதலும் வளர்ப்பதுமே நடிகமணிக்கு உகந்த நன்றிப்பணி என்று நாம் கருதுகிறேம். அதில், எம்மிடையே வாழும் நடிகமணி போன்ற முது பெரும் கலைஞர்களை ஊக்குவிப்பதும் அடங்கும்.

*நன்றி, உதயன் 11-07-89*

கலையென்ருல் உணர்ச்சிகளைக்
கவர வேண்டும்
களிப்பூட்டி அறிவினைப்போய்க்
கவ்வ வேண்டும்

— நாமக்கல் கவிஞர்



## மக்களிடமிருந்து மலர்ந்த கலைஞன்: மக்களது கலைக்குச் செழுமையூட்டிய நடிகன்:

நடிகமணி எனப் பாமரர்களாலும் இனங்கண்டு பாராட்டப்பட்ட நாடகமணி வைரமுத்து அவர்களின் மறைவு ஈழத்து மக்கள் கலைக்குப் பெருத்த பேரிழப்பாகும்.

உழைக்கும் மக்களிடமிருந்து தோன்றியவர் நடிகமணி. உழைக்கும் வர்க்கத்தினரிடமிருந்து தோன்றியது நாடோடிக் கலைகள்' அதில் தலையாயது நாட்டுக்கூத்து; நாட்டார் இலக்கியம்.

தனது வாழ்நாள் பூராவும் தான் தனது மக்களிடமிருந்து பயின்ற பாமரக் கலையைப் பேணிப் பாதுகாத்து வந்ததுடன் கடைசி வரையும் அதற்காகவே உழைத்து வந்தவர்தான் நடிகமணி அவர்கள்.

போர்த்துக்கீசர் வந்தனர்; போயினர். ஒல்லாந்தர் வந்தனர்; போயினர். ஆங்கிலேயர் வந்தனர்; தமது கலாசாரத்தையும், இறுக்கமாகத் தமது மொழியையும் இந்த மண்ணில் மீது ஆழ வேரூன்றி விட்டுப் போயினர்.

இத்தனை கலாசார, மத பண்பாட்டு, மொழி ஆதிக்கங்களுக்கு மத்தியிலும் நமது மொழியையும் கலாசாரங்களையும் பண்பாடுகளையும், பாரம்பரியக் கலை மரபுகளையும் பேணிப் பாதுகாத்தவர்கள் அடித்தட்டு மக்கள்: பாமர மக்கள்: கிராமத்து உழைக்கும் மக்கள்: விவசாயப் பெருங்குடி மக்களேயாவர்கள்.

அந்த மக்களிடமிருந்து மாபெரிய ஆல விருட்சமாகத் தோன்றியவர்தான் நமது மதிப்புக்குரிய நடிகமணி அவர்கள்.

எங்கிருந்தோ வந்து, நவீன செழுமையால் எம் மீது ஆதிக்கம் செலுத்த முயன்ற அந்நியக்கலை கலாசாரங்களாலும் நமது மக்கள் கலையை அழித்தொழிக்க முடியவில்லை.

காரணம் மக்களின் அடிமனசில் வேரூன்றிய கலையை அந்த அந்நியத் தாக்கத்தாலும் வெற்றி கொள்ள இயலவில்லை. மக்கள் கலையின் வெற்றியே இதில்தான் அடங்கியுள்ளது.

இதுவரையும் வாழ்ந்து இயங்கி இயக்கவைத்து ஒரு தனிக்கலைப் பாரம்பரியத்தை இடைவிடாது கட்டிப் பாதுகாத்து வந்த உயிருடன் திகழ்ந்த நடிக மணியை விட, மறைந்துவிட்ட நாடகமணி எதிர் காலத்தில் அதிக சக்தி வாய்ந்த கலைப் போராளியாகத் திகழுவார் என்பது திண்ணம்.

வாழும்போது அலட்சியம் செய்த கலைக்காகப் போராடிய போது கண்டுகொள்ளாமல் விட்ட உயர் கல்வி பீடங்கள், பல்கலைக்கழகங்கள் கலாச்சாரக் கழகங்கள் கலை இலக்கிய மன்றங்கள் அவரது ஆளுமை யின் சக்தியையும் வீச்சத்தையும் புரிந்துகொண்டு தக்க மரியாதை யையும் கௌரவத்தையும் நல்கத்தான் போகின்றன என உறுதியாகச் சொல்லுகின்றோம்.

என்னதான் ஆளுமை மிக்க மக்கள் கலையாக இருந்தாலும் கலை ஞனாக இருந்தாலும் அவைகளை ஆரம்பத்திலிருந்தே புரிந்து கொண்டு, இனங்கண்டு அநுசரித்துப் பேணி மக்கள் மன்றத்திற்கு அறிமுகப் படுத்தி வைக்கக்கூடிய ஒரு தூண்டுகோல் தேவை.

நடிகமணியைப் பொறுத்தவரை பேராசிரியர் வித்தியானந்தன் இவரது நாட்டார் கலை சம்பந்தமான மகிமையை மகத்துவத்தை மேதைதத்துவத்தை முன்னரே மெய்யாகவே உணர்ந்து கொண்டு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்ததை நாம் நன்றியுணர்வுடன் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கு நினைவு கூர்கின்றோம்.

பேராசிரியருடைய பேராதரவு நடிகமணிக்குக் கிடைத்தது ஒரு திருப்பமாக அமைந்தது. குடாநாட்டிற்குள்ளேயே பேசப்பட்ட நாடக மணியின் பேராற்றலும் பெருந் திறமையையும் தனி மனித மேதைத் தத்துவமும் தேசம் பூராவும் விரிந்து பற்றிப் படர்ந்து வியாபிக்கக் காரணமாக அமைந்தது. வெகுசன சாதனங்களில் பதிவு செய்யப்படத் தக்கதாகவும் வெளிப்பிரதேச மக்கள் மத்தியில் பிரபல்யமடையத் தக்க தாகவும் அந்த ஆத்மார்த்திக உறவு நடிகமணிக்கு உதவியாக அமைந் தது.

தோற்றத்தில் ரொம்பவும் எளிமையானதாகவும் நடிகமணி அவர் கடைசிவரை காட்சி தந்தார்.

அந்தக் காந்திய எளிமைக்குள்ளும் கலைத்துவ இறுமாப்பு அவரிடம் காணப்பட்டது.

அந்த சர்வாம்ச ஆளுமை மிக்க கலைத்துவ இறுமாப்புக் கொண்ட கலைஞனை இந்த மண் என்றென்றும் ஞாபகத்தில் வைத்திருக்கும் என்பது சர்வ நிச்சயம்.

மல்லிகை ஜூன் 1989



## நடிப்புலகத் திலகமே

நடிப்புலகத் திலகமே ஈழ நாட்டின்
நாடகத்தின் பேரொளியே வைர முத்தே
எடுப்புமிகு தோற்றத்தால் இனிமை சேர்க்கும்
எழிசையால் பாவத்தால் அறிவி னாலே
படித்தவரைப் பாமரரை ஈர்த்த தூய
பண்பட்ட நடிகமணி மறைந்திட் டாயோ!
துடிப்புடனே 'யாரடி நீ கள்ளி' என்றே
தோன்றி – நடிப் பதற்கினியார் உள்ளார் ஐயா

'நாடகத்தின் இமயமலை' என்றே உன்னை
நாவினிக்க வித்தி ஐயா சொன்ன போதும்
தேடரிய நடிகன் நீ என்று டி. கே.
சண்முகம்தான் உனைத்தழுவி அணைத்த போதும்
'ஈடிலா ஓர்கலைஞன்' நீயே என்று
குலதெய்வம் இராசகோபால் குறித்த போதும்
தேடரிய செல்வமே ஆணவம் தான்
சிறிதுமே இல்லாமல் விளங்கி னாயே

நாவினிக்கப் பாடுதற்கும் நடிப்ப தற்கும்
நாடகத்தின் பாத்திரத்திற் கேற்ற வண்ணம்
பாவினிக்கப் பொருளுணர்ந்து இசைப்ப தற்கும்
பாவமொடு தாளலயம் பிசகிடாமல்
பூவுலகில் அரங்கை எழிலூட்டு தற்கும்
பூக்குமிளங் கலைஞரைநன் கூக்கு தற்கும்
யாவருளர் இன்றைக்கு நடிகரேறே
நாம் தவிக்க விட்டு நீ சென்ற தேனோ.

காரை செ. சுந்தரம்பிள்ளை

## நாடகக் கலையுன் உடன்பிறப்பு

உயிரும் உடலும் ஒன்றிய சீர்
உலகில் உன்பெயர் ஒன்றியநேர்
வயிரம் முத்து இருவகைப் பேர்
வடிவம் இணைந்தே வளர்ந்து வந்தாய்!
இயல்பாய் பாடி நடித்து வந்தாய்
இதனால் நடிக மணியாகி
உயர்ந்தாய் வயிர முத்தனா
உன்பிரி வாற்றா தொன்றாகும்

நாடகக் கலையுன் உடன்பிறப்பு
நடிப்பிலக் கணமுன் நயச்சிறப்பு
பாடற் கலையுன் உடன்பிறப்பு
படிப்பிலக் கணமுன் இயற்சிறப்பு
வேடப் பொருத்தமுன் பிறப்பு
விரிவிலக் கணமுன் விழிச்சிறப்பு
தேடக் கிடையாத் திலகம்நீ!
தேர்ந்த ரசிகர்தம் திறன்சிறப்பு!

கவிஞர் வே. ஐயாத்துரை

> நற்சரிதை நற்கவிதை நல்நடிப்பு நாட்டினிலே
> நாடகத்தில் அமைக்க வேண்டும்
>
> — பாரதிதாசன்



## சிறப்பினை அணைத்து இதயத்தை நனைத்த நடிகமணி வி. வி. வைரமுத்துவுக்கு எமது கண்ணீர் அஞ்சலி

விண்ணிடிந்து வீழ்ந்ததுவோ?
    விரி[?]தியம் சாய்ந்ததுவோ?
பண்ணிசைக்கும் யாழ்நரம்பு
    பட்டென் றறுந்ததுவோ?
மண்ணிடையே ஓடுகின்ற
    மாநதியும் நின்றதுவோ?
என்னவென்று யானுரைப்பேன்
    எழில்வைர முத்திழந்தோம்.

வானப் பரப்பினிலே
    வளர்முகிலின் மேலேறி
கானக்குரல் விரித்த
    கலைக்குயிலின் றோய்ந்ததுவோ?
காணப் பெருங்கூத்தை
    காசினிக்குக் காட்டியவன்
காலக் கணக்கினிலே
    கண்மூடித் தோற்றானோ?

நின்றான் மயானத்தில்
    நாங்களிரு கண்சோர்ந்தோம்
வென்றான் நடிப்பிசையால்
    நடிகமணி நாம்நிமிர்தோம்
கொன்றான் கொடுங்காலன்
    கணத்தினிலே வீழ்த்திவிட்டான்
நின்றோம் தவிக்கின்றோம்
    நின்றிசைக்க யாரினிமேல்?

காலபட்ட மண்ணைக் கோவில்
கருவறை தன்னில் வைப்போம்
நீதொட்ட பொருளை யெல்லாம்
நெஞ்சத்தால் வணங்கு கின்றோம்
நீவந்த இடத்தில் நின்று
நிமிர்கிறோம் வைரக் கோவே
நீமட்டும் வந்து எங்கள்
நெஞ்சத்தில் இருக்கை கொள்க!

காங்கேசன்துறை
11-07-1989

மாம்பிராய் ஞானவைரவர்
அறங்காவலர் அவையகமும்
மாம்பிராய் கிராமமக்களும்

நாடகம் கலைக்கு அரசு; நாட்டின் நாகரிகத்திற்குக் கண்ணாடி: பாமர மக்களின் பல்கலைக் கழகம்; உணர்ச்சியைத் தூண்டிவிட்டு உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் தூய்மையையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை.

அவ்வை டி. கே. சண்முகம்



## முத்துக்களில் நீயோர் . . .

ஆடி முடிந்தது
அன்றொரு நாடகம்
ஆரவாரித்தது மக்கள் கூட்டம்
இன்று ஆரம்பமானது கலையுலகின்
அடங்கி விட்ட உன் மூச்சிற்கான
அமைதியெனும் அழுகை நாடகம் ......

கலையுலகில் நீ ஓர்
கற்கண்டாம் — நீ
கற்பனையில் வடித்தாய்
கவிதைகள் ஆயிரம் ......

நடிப் பெனும்
நளினத்தை உன்
நாவினால் வார்த்தெடுத்து
நாடு போற்ற வைத்திட்டாய்
நாயகனே உனை எங்கு காண்போம் ......
பள்ளிச் சிறுவர்க்கும்
பாமர மனிதர்க்கும் — நீ
படைத்திட்ட நற்
பாடங்கள்தான் எத்தனை

முத்துக்களில் நீ யோர் வைர
முத்தாய்; எம் இன மக்கட்கு
முத்தான செய்திகளை அளித்ததனால்
முடிவின்றி எம்முன் வாழ்கின்றாய்

வாழட்டும் உன் புகழ்;
வளரட்டும் கலையுலகம்
வாழ்த்துகிறோம்; புதியதோர் உலகை
வணங்குகிறோம் மாமனிதன் உன்னை.

மனித மனம் கலங்குவது அணுக்குண்டுகளால் அல்ல. அன்பற்ற இதயங்களால்

பண்ணுலை வீதி,
தெல்லிப்பளை

சொ. இன்பம்

## மக்கள் மனம் கவர்ந்த மன்னன்

ஒரு பிறவிக் கலைஞர் இன்று பிடிநீருய்ப் போய்விட்டார்.
சங்கீத மாரி பெய்யும் சகலகலாவல்லவன்
எங்கள் நடிகமணி இன்று பொய்கெட்டாமெய்யானர்.
காப்பாளராய் நின்று கனிவு செய்த அந்தப்போால மரத்தின் நிழலிலே
நாங்கள் அரங்கேறினேம்.
கூற்றுவின் கொடும்விதிக்கு ஆற்ருது அந்த அரும்வைரம்.
அணிமுத்து தீயிலே கருகி நீறெனப்போனது''
கூத்துலகம் தாங்காத கொடுமை இது!
இசையுலகம் தவிக்கின்ற இழப்புஇது......!!
கலைஞர்கள், குடும்பத்தார் வடிக்கும் கண்ணீரில் நாங்களும் பங்கு
கொள்கிறேம்.

மரணத்தை வென்ருய் – எங்கள்
    மனங்களை வென்ருய் அந்த
மண்ணுக்குக் கலைநீர் வார்த்து
    விண்ணுக்கு விருந்தாய்ப் போனுய்

உயரத்தில் நிற்கும் உன்னை
    உணர்கிறேன் உரைக்கும் வார்த்தை
உள்ளுறக் கலந்து நெஞ்சில்
    உறுதியை வளர்க்கும் ஐயா ........

காற்றிலே வருக நின்றன்
    மூச்சினை உணர்வே னென்றன்
கனவிலே வருக ஐயா
    கண்டுஎன் விழிநிறைப்பேன்

நேற்ருேடு போவதன்று
    நினைவுகள் வாழும் வாழும்
ஆற்ருது குமுறும் நெஞ்சுக்
    காறுதல் மழையாய் வாராய்........

நடிகமணியின் நிழலிலே வளர்ந்த

பொ. கணேசமூர்த்தி
இளம் தமிழர் மன்றம்

காங்கேசன்துறை



## காண்ப தெப்போ?

ஆலமரமாய் நின்று அனைவருக்கும் நிழல் தந்தீர்
பாசமாய் நின்று பரிவுடனே ஆதரித்தீர்
காரிருளில் ஒளி தந்தீர் கடமை முடித்தீர்
காலமெல்லாம் உம் நினைவுடன் காத்திருப்போம்.

அன்பின் அமிர்தமாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய் அன்பின் திருவுருவாய்
இல்லத்தின் ஒளிச்சுடராய் விளங்கிய எமது அறிவுச் செல்வமே
காலங்கள் கரைந்தாலும் எம் இதயத்தில் பதிந்த உம்
நினைவுக் கோலங்கள் என்றும் அழிவதில்லை மீண்டும்
நீர் எங்களிடம் வர இறைவன் கருணை கூர்வாராக!
எங்கள் அன்பின் தேடற்கரிய செல்வமான வைரமுத்து ஐயா!

தமிழ் இலக்கியத்தின் நேர்மை, சத்தியந்தவரு வுத்தமனின் சரிதையை அதாவது அரிச்சந்திரன் பார்புகழும் பாவேந்தனின் வாழ்வில் ஏற்பட்ட உண்மை நிலையை நேரிற் கண்டறிய மேடைகளில் அரிச்சந்திரனுக வந்த காட்சி, கற்பின் மகிமையால் இயமனிடம் வரம் பெற்ற சத்தியவான் சாவித்திரி சத்திய வேத இலக்கியப் படைப்பான ஞானசவுந்தரி முதலான நேர்வழி; கற்பு; சத்தியமாய மரபுகளை எம்முன் கொணர்ந்த தெள்ளமுதை, தெவிட்டாத செந்தேனை, இனி நாம் காண்பதெப்போ? குரலை இங்கு விட்டு, உடலை மண்ணுக்கு விட்டு, ஆவிதான் இறைபதம் அடைந்துவிட்டதா?

சாந்தி

காங்கேசன்துறை — உதயசூரியன் சனசமூக நிலையம்

## நந்தா விளக்கு

அற்புதக் கலைஞன்
ஆற்றல்மிகு அரங்க நடிகன்
இணையிலா இசை வித்தகன்
ஈடில்லா முத்தமிழ் வல்லோன்
உலகறிந்த நற்பண்பாளன்
ஊர்போற்ற மேடைபல கண்டவன்
என்பெலாம் உருகும் இசைமாமேதை
ஏற்றம்பல பெற்ற நாடகமாமணி
ஐயநீ' ஏற்றியதீபங்கள் அணையுமோ?
ஒப்பிலா உன்புகழ் உலகினில் மறையுமோ?
ஓலந்தான் குறையுமோ? உன்நினைவு அகலுமோ?
ஔவைச்சண்முகம் போன்ற அழகுருவே
ஒன்று கூறுவேன் நீயோர்அற்புதச் சுரங்கம்
நம்மவர் புகழ்விளக்கும் நந்தாவிளக்கு.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

ஏ. ரி. பொன்னுத்துரை



## அவர் ஓர் நல்முத்து

### நிதிவெண்பா

மன்னுசுக்ல ஆடி மதிக்கு மபரபக்ஷ
துன்னு ஷஷ்டியான தூயதிதி — மின்னு புகழ்
சீர்தங்கு வைரமுத்து சேயிழையாள் ஈசன்றன்
ஏர்பாத முற்றார் இனிது.

### — ஆசிரியப்பா —

தாமரை மலரின் தண்தாதுண்டு
களி வண்டினங்கள் காமரம் பாடும்
இன்னிசை தன்னுடன் இயலடியார்கள்
பண்ணிசை யெங்கும் பரந்தினி தொலிக்கும்
யாழ்நகர் வடக்கில் யாத்துள நற்பதி
தென்னை பூகம் தேமா வருக்கை
இன்னன பொலியும் எழிலார் சோலைகள்
கைதை செறிந்த நெய்தல் வளமும்
புகல் தொழிற்சாலை புகைசூழ் நிலையம்
ஏர் கல்லூரிகள் எழிலார் மாடம்
புதுமை சிறந்து பொலிவுறு நற்பதி
மாவைக் குமரன் மன்னு விக்கிரகம்
மாருதப் புரவீக வல்லியின் செயலால்
காங்கேசன் துறையெனக் கற்றவர் போற்றும்
நாடும் சிறப்புடைநன் நகரதன் கண்
வைரமுத்து நல்வைரம் வாய்த்தனன்.

V. V. வைரமுத்துவென்றால் அவரின் பெயர் தெரியாதவர்கள் இங்கிலையெனலாம், எமது கழகத்திற்கு எவ்வித உதவி வேண்டுமோ மனங்கோணாது முன்னின்று எம்மை ஊக்குவித்து எமது கழகத்தை வழி நடாத்தி எம்மை மகிழ்வித்த வித்தகமே நீங்கள் மறைந்து மாதம் ஒன்று மறைந்து விட்டது. ஆனால் எமது கழகம் இருக்கும்வரை உங்களை மறந்துவிட முடியாது.

தங்கள் சேவையால் எங்கள் கழக உறுப்பினர்கள் பெற்ற அனுபவம் அளப்பரியது.

காங்கேசன்துறை

ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர்

## நாடகக் கலையும் நடிகமணி அவர்களும்

நாட்டகத்தில் நாடகக் கலை வளர்ந்தது. காட்டகத்தில் காவல் புரிந்து பாட்டகத்தில் பாக்கள் இசைத்து வீட்டகத்தில் விருந்தோம்பி விண்ணுலகம் சென்றது ஓர் முத்து. அது ஓர் வைரமுத்து, சத்தியமே இலட்சியமாய் தார்மீகமாய் தலையாய கொள்கையாய் தரணியிலே எடுத்துரைத்து தானுமதுவாகப் பாவித்து வாழ்ந்துவந்த கலைத் தென்றல் கலைமாமணி திரு. வி. வி. வைரமுத்து.

நாடகத்தின் வைரமாகவும் நாட்டியத்தின் முத்தாகவும் இசையின் வைரமுத்தாகவும் வாழ்ந்த பெருமை. பெருமையே.


இசைத்தமிழைக் கடந்து இயற்றமிழின் வரம்பை இகந்து நாடகத் தமிழை நாற்றிசையும் பரப்பி ஈழத் தமிழ் இலக்கிய மரபை புரட்சிகரமாக்கித் தமிழ்த்தாயை புரட்சியின் பாதைக்கு வழிநடத்தி வாழவைத்த முத்து ஓர் மாமனிதன்.

கலைத்தாயின் அரியமகன்; காவியத்தின் இளைய மகன் கடமை செய்து நிறைவுற்றான். வாழ்க அவன் புகழ், வளர்க அவன் தமிழ்.

ந. மகேந்திரராசா
நாடகக் கலா மன்றம்
கா. சீ. தொழிற்சாலை

காங்கேசன்துறை





## நன்றி

எங்கள் குடும்ப விளக்கு நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்கள் கொழும்பில் காலமானபோது அங்கே நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தும், யாழ்ப்பாணத்துக்கு அன்னாரது பூதவுடலை அனுப்ப முயற்சியெடுத்தும் உதவிய மறைந்த தலைவர் அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மாவை சேனாதிராஜா ஆகியோருக்கும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனக் கலைஞர்கள், ரூபவாஹினிக் கலைஞர்கள் ஆகியோருக்கும், குறிப்பாக திரு. P. விக்னேஸ்வரன், திரு. வி. என். மதியழகன், செல்லையூர் செல்வராசன் கமலினி தம்பதியர்க்கும், கலைஞர் வேல் ஆனந்தன், திரு. S. S. கணேசபிள்ளை, (வரணியூரான்) பெ. சிவகுருநாதன் ஆகியோருக்கும் சகல உதவிகளையும் செய்து பூதவுடலை இங்கே அனுப்பி வைத்த பிறீலங்கா ஸ்ரோர்ஸ் (Free Lanka Stores) திரு. நா. த. தர்மகுலராசசிங்கம், திரு. N. கருணாகரன் ஆகியோருடன் சகல ஊழியர்களுக்கும் திருவாளர்கள் சி. பாபநாசசிவம், பி. திருநாவுக்கரசு ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும்,

அந்திமக் கிரியைகளைப் பொறுப்பேற்றுச் செய்துதவிய காங்கேசன் துறை மக்களுக்கும்,

செய்திகளை உடனுக்குடன் பெற்றுத்தந்த கே. கே. எஸ். பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் ஆகியோருக்கும்,

இரங்கலுரை நிகழ்த்திய அன்பர்களுக்கும்,

மலர் வளையங்கள், மாலைகள் சாத்திக் கௌவித்தோருக்கும்,

கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டு அனுதாபம் தெரிவித்த கழகங்களுக்கும், அன்பர்களுக்கும்,

திருமதி ச. கருணானந்தசிவம், அற்புதாலயா எம். அற்புதலிங்கம் அவர்களுக்கும்,

செய்திகளை வெளியிட்டும், ஆசிரிய தலையங்கம் எழுதியும், கட்டுரைகளை வெளியிட்டும் கௌரவித்த பத்திரிகைகள் அனைத்துக்கும்,

இரங்கற் செய்திகள் அனுப்பியோருக்கும்,

இம்மலரில் எழுதிய பெரியோர்களுக்கும்,

போட்டோ எடுத்து புளொக் செய்துதவிய யாழ்ரூபி ஸ்ருடியோவிற்கும்,

இம்மலரை இன்றைய இக்கட்டான நிலையிலும் நடிகமணியைக் கௌரவிக்குமுகமாக குறுகிய காலத்தில் அச்சிட்டுதவிய யாழ் செட்டியார் அச்சக உரிமையாளர் சங்கருக்கும்,

இம்மலரைத் தொகுத்துப் பதிப்பித்த காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவியும் பிள்ளைகளும்

பின் இணைப்பு

## மயான காண்டம்
## வெற்றியளித்ததேன்?

செவிப் புலனுக்கும் கட்புலனுக்கும் ஒருங்கே இன்பத்தைக் கொடுக்கும் உயர்தனிக் கலை நாடகக் கலை. இத்தகைய கலை ஈழத்திலே குறிப்பாக தமிழர் மத்தியில் எத்துணை வளர்ச்சி பெற்றிருக்கிறதென நாம் எண்ணிப்பார்த்தால், வியத்தகுமளவுக்கு தமிழ் நாடகங்கள் வளரவில்லையெனினும் ஓரளவுக்கு அது வளர்ந்துள்ளதென்பதையும் வளர்ச்சியின் எல்லையை அது எய்தும் காலம் வெகு தூரத்திலில்லையென்பதையும் நாம் ஒப்புக்கொண்டேயாகவேண்டும்.

நவீன உத்திகளும் தொழில் நுட்பத்திறனும் ஒருங்கமைந்து பல காட்சிகளையும் கொண்டிருக்கின்ற சினிமாவைப் பார்த்து களித்து மகிழும் ரசிகர்களைக் கொண்ட நம் நாட்டில் நாடகத்துறை வெற்றியீட்டுவதென்பது மிகவும் சிரமமான செயலேயாகும். சினிமாவின் தொழில் நுட்பத்திறனையும் அதேபோன்ற காட்சிகளையும் நாடகத்திலும் எதிர்பார்க்கின்ற ரசிகர்கள் ஏமாற்றமடைவது இயல்பே. நம் நாடகத்துறையில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்திறன் மிகமிகக் குறைவே. இத்துறையில் நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம் என்ற கசப்பான உண்மைகளை ஏற்றுக்கொண்டேயாகவேண்டும். இந்த நிலையிலே நாடகத்தின் மூலம் ரசிகர்களைக் கவருவதென்பது கஷ்டமானதொன்றே இத்தகைய சிரமங்களினூடே ஒரு தரமான நாடகத்தை மேடையேற்றுவதே சிரமமாகும். மேடையேற்றினும் அது வெற்றி பெறுமோ என்பது கேள்விக்குறியேயாகும்.

இந்தச் சூழ்நிலையிலேதான் ஒரு நாடகம் மேடையேறி ரசிகர்களின் இதயத்தைக் கவர்ந்தது. அதுவும் சில தடவைகளல்ல ஆயிரத்துக்கு மேற்பட்ட தடவைகள் மேடையேறி, பார்த்த ரசிகர்களை மீண்டும் மீண்டும் சலிப்பின்றிப் பார்த்து ரசித்துப் பாராட்டுகின்றனரென்றால், நாடகத்துறையில் அது ஒரு மாபெரும் வெற்றியென்றே கூறவேண்டும்.



இந்த நாடகம் வெற்றி பெற்றதற்குக் காரணங்கள் பலவுள. பேசும் படப் பணியைப் பின்பற்றி ஏன் அவற்றையே நாடகமாக்கித் தருகின்ற பல்லோர் நம் மத்தியிலிருக்கின்றனர். பல நாடகங்களைப் பார்க்கின்ற பொழுது அவற்றின் தயாரிப்பிலே அனுபவக் குறைவைக் காண முடிகின்றது. ஆற்றலிருப்பினும் அனுபவமும் அவசியமாகும். தடுகித்தவழும் குழந்தை தத்தி நடை பயிலும் பொழுது தாயினதோ அன்றி வேறொருவரினதோ துணைதனைத் தேடுகின்றது தனித்து நடக்கப்புகும் குழந்தை தடுக்கி விழுவது தவிர்க்க முடியாததாகும். நாடக உலகில் முதலடி எடுத்து வைப்பவர்களும் இக்குழந்தை நிலையிலிருப்பவர்களே. மயான காண்டத்தின் வெற்றிக்கு முதற் காரணம் அனுபவசாலிகளின் துணையும் ஆலோசனையுமேயாகும். ஈழத்துச் சிறுகதையுலகில் தனக்கெனத் தனியிடத்தை நிலைகித்து வந்தவரும் நாடகத்துறையில் நாட்டங்கொண்டவருமான மதிப்புக்குரிய மறத்தற்கரிய 'இலங்கையர்கோன்' அவர்களும், நாடக வளர்ச்சிக்கு அயராது அரும்பணியாற்றிவருமா கலாநிதி வித்தியானந்தன் அவர்களும், நாடகத்துறையில் ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த கலாஜோதி சண்முகநாதன் (சானா) அவர்களும் 'மயான காண்டமெனும்' குழந்தை நடை பயிலக் கை கொடுத்தவர்களாவர். இப்பெரியோரளித்த அனுபவ முத்துக்கள் மயான காண்டத்தை அழகு செய்தன.

பாடல்களையே பெரும்பாலும் கொண்டதெனினும் தேவையான இடத்திலே பயன்படுத்தப்படவேண்டிய வசனங்களை உருவாக்கித் தந்தவர் காலஞ்சென்ற ஐயா 'இலங்கையர்கோன்' அவர்களே. இந் நாடகத்தின் பயிற்சிக்கு உதவியவர் கலாஜோதி 'சானா' அவர்கள். இதனை இலங்கை வானொலித் தீபாவளிக் கலை விழாவில் இலங்கைக் கலைக் கழகத்தின் சார்பில் முதன் முதல் மேடையேற்றத் துணை செய்தவர் கலாநிதி வித்தியானந்தன் அவர்கள். இம்முப்பெரும் அறிஞர்களின் ஆலோசனைகளை ஏற்று அவர்களின் ஆதரவைப் பெற்றமை மயான காண்டம் வெற்றி பெறப் பெருந்துணையாயிற்று.

வாய்மை மன்னன் அரிச்சந்திரனின் வரலாறு சிறுவர் முதல் முதியோர்வரை யாவரும் அறிந்ததே. அதன் இறுதிப் பகுதி அதாவது 'மயான காண்டம்' மக்களின் உள்ளங்களை உருக்கும் தன்மை பெற்றது. சுருங்கக் கூறின் அது நாடகத்திற்கேற்ற நல்ல கதை. நாட்டு மக்களுக்கு நல்ல அறிவுரை. கதையமைப்பும் வளமான கருத்துச்செறிவும் நாடகத்தின் வெற்றிக்கு அவசியம். மறத்தமிழ்த் தலைவர் ம. பொ. சி கூறியதுபோல 'ஒரு பொய்கூறி மன்னவனாய் வாழ்வதைவிட உண்மை கூறிப் புலையனாய் வாழ்வது மேல்' என்ற தத்துவத்தை உட்கிடக்கையாய்க் கொண்டது மயான காண்டம். கதை வளமும் கருத்துச் செறிவும் கொண்டது. இதுவும் நாடகத்தின் வெற்றிக்குக் காரணம்.

எத்தனைதான் அனுபவம் வாய்ந்த நடிகரானாலும் போதிய பயிற்சியின்றி மேடையிற்தோன்றி வெற்றிபெற முடியாது. இதனையே அனுபவமிக்க கலையரசர் சொர்ணலிங்கம் அவர்களும் அடிக்கடி எமக்கு வற்புறுத்துவார். மயானகாண்ட நாடகக் கலைஞர்கள் அந்தனை பேரும் நாடகம் மேடையேற்றப்படுவதற்கு முன் பலமுறை ஒத்திகை பெறுகின்றனர். அதுமட்டுமல்ல ஒரு இயக்குநரின்கீழ் கட்டுப்பாட்டுடன் பணிபுரிவர். நடிகர்களின் பணிவும் கட்டுப்பாடும் நாடக வெற்றிக்குத் துணையாயின. இயக்குநர் சுட்டிக் காட்டும் தவறுகளைத் திருத்திக் கூறும் புதிய வழிகளை மனக்கசப்பின்றி ஏற்று ஒத்துழைப்பு நல்கினர். மயானகாண்ட இயக்குநர் என்ற வகையிலே நாடகத்தின் வெற்றிக்கு நடிகர்களின் ஒத்துழைப்பே பெரும் காரணமென்பேன்.

நடிகர்கள் அனைவரும் சொந்தப் பாணியிலே தத்தமக்குரிய பாத்திரங்களை நடித்து உணர்ச்சி மயமான நடிப்பைப் பிரதிபலித்தனர். சினிமாவிலே பின்பற்றப்படுவது போல் பின்னணிக் குரல் கொடுப்பது நாடகத் தோல்விக்கு ஒரு காரணமாகும். இது இல்லாது எல்லோரும் தாங்களாகவே பாடி, ஒரே சமயத்தில் உணர்ச்சிகளை உடனுக்குடன் பிரதிபலித்துக் காட்டி நடிப்பதுவும் வெற்றிக்குக் காரணமாகும்.

மயானகாண்டம் குறுகிய நேரத்துடன் நடிக்கப்படும் நாடகம். அடிக்கடி திரை வீழ்ந்து இறப்பதன் மூலம் ரஸிகர்களின் வெறுப்புக்கு இடம் கொடாமல் மிகவும் கவனத்துடன் காட்சிகள் மாறுகின்றன. நாடகம் எந்தக் காலத்தை எந்தச் சூழலைப் பின்னணியாகக் கொண்டதோ அதற்கமைய உடைகளும் ஒப்பனைகளும் முக்கியமெனக் கவனம் செலுத்தியதும் வெற்றிக்குக் காரணமே.

மேடையில் ஒலிபெருக்கியை எதிர்பார்த்து முகபாவங்களை மக்கள் பார்க்கத் தடையாயிருந்ததில்லை நமது நடிகர்கள். இன்றைய தொங்கவிடப்படும் ஒலிபெருக்கியமைப்பு முறை தமிழ் நாடக உலகின் சாபக்கேடென்றே கூறவேண்டும். இவையெல்லாவற்றுடனும் நாடகமரபு பிறழாத வகையிலே மயானகாண்டம் உருவாக்கப்பட்டது.

இக்காரணங்களினாலேயே மயான - காண்டம் மக்கள் ஆதரவைப் பெற்று வெற்றி நாடகமாய்ப் பவனிவர முடிகிறது.

நன்றி தினகரன் நாடக விழா மலர் **1960**

செட்டியார் அச்சகம் யாழ்ப்பாணம் 598/89